உ
குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 32 | பிரமாதீச - புரட்டாசி - 10—10—73 | இதழ் 11

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே - சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

# கயிலைக் குருமணியைக் கைதொழுது உய்வோம்

**தருமை - ஞானபீடம் :**

அனைத்துயிர்க்கும் முதல்வனாகிய இறைவன், தேவர், முனிவர், சித்தர் முதலிய பலரும் கண்டு வணங்கத் திருவுருக் கொண்டு எழுந்தருளியிருக்கும் திவ்வியத்திருமலை திருக்கயிலாயம். இத்திருமலையில் இறைவன் உமையோடுகூடி உலகர்க்குப் பலவகைப் போகங்களையும் அருளினும், பக்குவிகளுக்கு அருள் ஞானத்தை வழங்கி, அது வாயிலாக வீடு பேற்றையுந் தருகின்ருன். அவன் ஞானத்தை வழங்குதற்குக் கொண்ட வடிவமே தட்சிணாமூர்த்தத் திருவடிவம்.

இத்திருவடிவத்தில் ஒருமுறை சனகாதி நால்வர்க்கு, "பாசத்தைப் பசுக்கள் விட்டுப் பதியினை அடைய முத்தி" என்னும் உண்மை ஞானத்தைச் சின்முத்திரையினாலே, சொல்லாமற் சொல்லியருளிய இறைவன், பின்பு ஒருகாலத்தில் நந்திபெருமானுக்கு முப்பொருள் உண்மையாகிய சிவஞானத்தை ஆகம விளக்கங்

களோடே உபதேசித்தருளினன். அவ்வுபதேசம் குருபரம்பரை வாயிலாக உலகத்தில் நின்று நிலவ வேண்டும் என்பதும் அவனது திருவுளக் குறிப்பாய் இருந்ததனுல், அங்ஙனமே அது 'சயிலாதி மரபு' எனப் பெறும் நந்தி பரம்பரையின்வழி இன்றும் உலகத்தில் நின்று நிலவுகின்றது. அதனுல், இத்திரு மரபு 'திருக்கயிலாய பரம்பரை' எனப் போற்றப் பெறுகின்றது. இத்திருமரபில் கமலை ஞானப்பிரகாச தேசிகர்பால் ஞானுப தேசம் பெற்றுச் சிவானுபூதியில் சிறந்து விளங்கிய ஸ்ரீ குருஞான சம்பந்தர் தம் ஆசாரியரது அருளாணையின்வண்ணம் தருமையில் நிறுவியருளிய ஞானபீடமே தருமை யாதீனம்.

### கயிலைக்குருமணி :

இவ்வாதீன குரு பரம்பரையில், 'மாகேசுர மூர்த்தம் இருபத்தைந்து' என்பதுபோலத் திருவருள் வாய்ப்பாக 25ஆவது குருமகாசந்நிதானமாக எழுந்தருளியிருந்து 26 ஆண்டுகளுக்கு மேல் அருளாட்சி செலுத்தியவர்கள் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமாமணி அவர்கள். செயற்கரிய கயிலாய யாத்திரையைச் செய்து 'கயிலைக் குருமணி' என அனைவராலும் போற்றப்பெற்ற இவர்களது இரண்டாவது குருபூஜைத் திருநாள் அண்மையில் சிறப்புற நிகழ இருக்கின்றது. இவ்வமையம் இவர்களது அருளாட்சியின் நலங்கள் பலவற்றை நினைவுகூர்தல் அன்பர் பலர்க்கும் அக மகிழ்வைத்தருவதோடு, அருள் வழியில் நிற்றற்குரிய ஊக்கத்தை யும், ஆக்கத்தையும் உண்டாக்கும்.

### சிவத்தல யாத்திரை :

நந்திமரபு 'திருக்கயிலாய பரம்பரை' என்பதற்கு ஏற்ப யாவரும் நினைத்தற்கும் அரிய கயிலையாத்திரையை அன்பர் பலருடன் மேற்கொண்டு செய்து, கயிலாய தரிசனம் செய்து மீண்டமை ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணியின் செயற்கருஞ் செயல்கள் பலவற்றினும் தலையாயதாகும். திருக்கயிலாய தரிசனத்துடன், இமயப்பெருந் தலங்களாகிய அமரநாதம், திருக்கேதாரம் - மற்றும் நேபாளத்தில் உள்ள பசுபதிநாதம் என்னும் தலங்களையும் இவர்கள் உடன் தரிசித்து மீண்டார்கள். சோமநாதம் முதலிய துவாதச ஜோதிர்லிங்கங்களையும் அன்பர்கள் பலருடன் எழுந்தருளித் தரிசித்தமை, இவர்களது சிவதல யாத்திரையின் எழுச்சிமிகுதியை உணர்த்தும். இந்தியநாட்டில் உள்ளதேவாரப் பாடல்கள்பெற்ற திருத்தலங்கள் அனைத்தையும் சென்று தரிசித்த சிறப்பு ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்களுக்கு உண்டு. காசி யாத்திரையை இவர்கள் ஆதீன அன்பர்களுடனும், ஏனையபக்தர் களுடனும் பலமுறை செய்துள்ளார்கள்.

**பல்வகைப் பணிகள் :**

சைவ ஆதீனங்கள் சமய பரிபாலனம் புரியும் சிவராஜ தானிகள். அத்தகைய பரிபாலனத்தைக் கயிலைக் குருமாமணி அவர்கள் பலவகையில் புரிந்தருளினார்கள். தங்கள் ஆதீனத் திற்குச் சொந்தமான திருக்கோயில்கள் அனைத்திலும் சிறந்த திருப்பணிகள் பல நிறைவேற்றிப் பலரும் வியந்து போற்றும் வகையில் மகாகும்பாபிடேகங்களை மிகச் சிறப்புற இவர்கள் செய்வித்தமை, அவ்வாலயங்களில் எப்பொழுதும் தெய்வ சாந் நித்தியம் விளங்குதற்கு ஏதுவாயிற்று. வேளூரில் ஸ்ரீ முத்துக் குமரசுவாமி, வள்ளி தெய்வயானை முதலியவர்களுக்கு இவர்கள் நவரத்தினகவசம் அணிவித்து மகிழ்த்தமை, பிற ஆலயங்களிலும் நவரத்தின ஆபரணங்கள் மூர்த்திகளுக்கு அணிகலமாய் அமைந்து அழகுதருதற்கு வாயிலாயிற்று எனலாம். ஆலயங்கள் தூய்மையாக விளங்கவும், நித்திய நைமித்திகங்கள் முறையாக நிகழவும் இவர்கள் செய்துவந்தமை ஆலய நிர்வாகத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கியது. தங்கள் ஆதீனக் கோயில் களுக்கேயன்றிப் பிற ஆலயங்களிலும் வேண்டுவன பலவற்றிற்கு இவர்கள் நன்கொடைகள் வழங்கிப் புரந்தருளினார்கள்.

ஆதீன குருமூர்த்தங்களுக்கு இவர்கள் தனித்தனியாக ஆலயங்கள் அழகுற எடுத்துக் கும்பாபிடேகம் செய்வித்து மகிழ்ந்தார்கள். ஆதீனக் கீழைக்கோயிலில் அஷ்டாதச புஜ ஸ்ரீ மகாலட்சுமி துர்க்காதேவியைப் பிரதிட்டை செய்து நவராத்திரி காலங்களில் உலக நலத்தின் பொருட்டுச் சகஸ்ரசண்டியக்ஞம், சதசண்டி யக்ஞம், கோடி அர்ச்சனை முதலியவைகளைச் செய்வித்து வந்தமை, உலக நலத்தில் இவர்களுக்கிருந்த அரு ளுள்ளத்தை விளக்குகின்றது.

**ஞானதானம் :**

'ஓடிவரும் காரணர்கள்' என்ற வகையில் ஆர்வம் உற்று வரும் அன்பர்கட்குச் செய்யும் அருளுபதேசத்துடன், கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும் வேட்ப மொழியும் தங்கள் இனிய மொழிகளால், இலக்கியம், புராணம், தோத்திரம், சாத்திரம் முதலியவை பற்றிய அரும் பொருள்கள் பலவற்றை உணர்த்திச் சமய உணர்வு வளரச் செய்தார்கள். ஆதீனத் திங்கள் வெளியீடாகிய 'ஞானசம்பந்தம்' இதழில் 'குருவருள்' என்னும் தலைப்பில் தங்கள் அரிய திருவுள்ளக் கருத்தை வெளிவரச் செய்து பலர்க்கும் அருளுரை வழங்கி அருள் நெறியில் ஆர்வமுறச் செய்தார்கள். திருமுறைகளைத் தனித் தனிப் புத்தகமாக அரிய குறிப்புரை ஆராய்ச்சியுரைகளுடன்

வெளிவரச் செய்தது இவர்களது ஞான தானத்தில் முதலிடம் பெற்று விளங்குவது. தமிழ் நாட்டின் தலைநகராகிய சென்னையில் சமயப் பிரசார நிலையம் நிறுவி, 'இறைபணி மன்றம்' என்னும் அமைப்புடன் பிரசார வாகனத்தின் துணை கொண்டு தமிழ் நாட்டின் பல இடங்களிலும் சமயப் பிரசாரம் நிகழ்வித்துச் சைவப் பயிரை என்றென்றும் இவர்கள் தழைத்தோங்கச் செய்தார்கள்.

## சமுதாயப்பணிகள் :

ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்கள் கல்விப் பணி, சமுதாயப் பணிகளை வேருக நினைக்கவில்லை. அனைத்தையும் சமயப் பணியாகவே கருதிச் செய்வித்து வந்தார்கள். தங்கள் அருளாட்சியில் இவர்கள் நிறுவியருளிய பல்கலைக் கல்லூரி, இளந் தலைமுறையினர் பலர்க்கு இன்றும் உயர் கல்வியையும், சிறந்த சமய ஞானத்தையும் வழங்கி வருகின்றது. மாயூரம் அரசினர் மகளிர் கல்லூரி, தருமையில் திருக்கோயில் கொண்டு விளங்கும் ஸ்ரீ ஞானம்பிகையின் திருப்பெயரால் 'தருமபுரம் ஞானம்பிகை மகளிர் கல்லூரி' என விளங்கிப் பணிபுரியுமாறு ஒன்றரைலட்சரூபாய் நன்கொடையாக வழங்கியருளினார்கள். மற்றும் தொடக்கப்பள்ளி உயர்நிலைப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் மாணவர்களுக்கு ஊக்கப் பரிசுகளை அளித்தருளினார்கள். ஆண்டுதோறும் நிகழும் ஆவணி மூல விழாவில் பல துறை அறிஞர்கட்கு இவர்கள் பட்டமும், பரிசும் வழங்கிச் சிறப்பித்தமை சமுதாய நலத்திற்குப் பெருந் துணையாய் விளங்கியது. இவர்களது அருளாட்சியின் நலங்கள், 'விரிப்பிற் பெருகும், தொகுப்பின் எஞ்சும்' என்ற வகையில் உள்ளன. இவை அனைத்திலும் ஈடுபட்ட அன்பர்கள் இவர்கட்குக் கனகாபிஷேகம் செய்வித்து இவர்களைக் கனகாபிஷேகம் கொண்ட கயிலைக் குருமணியாகக் கண்டு வணங்கிக் களிப்புற்றார்கள்.

## திருவருள் அழைப்பு :

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் திருவருள் உறைப்பிற்கு ஏற்ப அவர்களது பரிபூரணமும் வியக்கத்தக்க வகையில் திருவருட் குறிப்பின்வழி நிகழ்வதாயிற்று. காசி யாத்திரையை இவர்கள் விரோதிகிருது ஆண்டு (1971) ஐப்பசித்திங்களில், அன்பர்கள் பலர் இவர்களது திருமேனி நிலைபற்றி இசையாதிருந்த பொழுதும் 'திருவருள் அழைப்பு' என்ற முறையில் மேற்கொண்டு காசியை அடைந்து, அடைந்த அன்றே ஆசனத்தில் வீற்றிருந்து அன்பர்கட்கு, ஆதீனத்தின் 10 ஆவது மகாசந்நிதானம் அருளிச் செய்த தாரகப் பத்து முதலியன பற்றி உபதேசித்துக்கொண்டு இருந்தபொழுது, அவ்வாறு வீற்றிருந்த நிலையிலே பரிபூரணம் அடைந்தமை அனைவரையும்

திகைப்பிலும், வியப்பிலும் ஆழ்த்தி, இவர்களது அருட்டிறத்தை அகங்கொள்ளச் செய்தது. நோயுற் றடராமல் நொந்துமனம் வாடாமல் பாயிற் கிடவாமல், ஓர் நொடிக்குள் பரிபூரண மாவதையே ஞானியர் பலரும் வேண்டியிருப்பர். அது நம் கயிலைக் குருமணி அவர்கட்கு பல நாள் சென்று அதற்கென்றே தங்கியிருப்பவர்கட்கும் கிடைக்காத முத்தித் தலமாகிய காசித் தலத்தில் கிடைத்தமை, எண்ணி எண்ணி இறும்பூது உறுதற்கு உரியதாகும்.

## திருவருட் குறிப்பு :

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களின் அருள்வழித் தோன்றலாகத் தருமை யாதீனத்தில் ஞானபீடத்தமர்ந்து இது பொழுது அருளாட்சி செலுத்தி வருபவர்கள் 26 ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள். கயிலைக் குருமணியின் திருமேனியை இவர்கள் காசியினின்றும் தருமைக்கு எழுந்தருள்வித்து அடியார் களும், அன்பர்களும், பல பெருமக்களும் சூழ முறைப்படி கனனம் செய்வித்துக் குருமூர்த்த ஆலயத்தை அவர்கள் காசியில் பரிபூரணமானதன் நினைவாகக் காசி விசுவேசுரர் ஆலயத்தின் அமைப்பில் எடுத்து அடுத்த ஆண்டிற்குள் நிறைவு செய்து, முதற் குருபூஜை நாளன்றே மகாகும்பாபிடேகமும் மிகச் சிறப்புற நிகழ்வித்து, கயிலைக் குருமாமணியின் அருட் சிறப்புக்கள் பல வற்றையும் அன்பர்கள் அறிந்து அருள்நெறி நின்று பயனுறும் வண்ணம் நினைவு மலர் ஒன்றும் வெளிவரச் செய்தருளினர்கள்;

25-ஆவது குருமூர்த்திகளது இக் குருமூர்த்த ஆலயத்தில், ஒருவரும் நினைந்து செய்யாதவகையில் திருவருட் குறிப்பாக 25 கலசங்கள் அமைந்திருத்தலைக் கும்பாபிடேக காலத்தில் பலரும் கண்டு வியப்புற்றனர்.

## தருமையிலும் காசியிலும் :

கயிலைக் குருமாமணியின் 2 ஆவது குருபூஜை விழா முதற் குருபூஜையைப்போலவே 19—10—73 அன்று மிகச் சிறப்பாக 26 ஆவது குருமகாசந்நிதானம் அவர்கள் நிகழ்விக்க இருக்கின்ற அருள் நிகழ்ச்சியாகும். அவ்வமையம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி யின் அருள்மொழிகளின் தொகுப்பு, நூல்வடிவில் வெளிவர இருக் கின்றது. அன்று காசியிலும் ஸ்ரீ விசுவேசுரருக்கு அபிஷேக ஆராதனைகள், சாதுக்கள் நூற்றெண்மருக்கு - 'பண்டாரா' எனப்படுகின்ற அடியார்கட்கு அன்னம்பாலிப்பு முதலியன சிறப்பாக நடைபெறும். அனைத்திலும் அன்பர்கள் பலரும் அருட் குழாங்களாகத் திரண்டு கண்டும் கேட்டும், கயிலைக் குருமணி யைக் கைதொழுது உய்வோமாக.

தருமையாதீன ஆவணி மூலத் திருநாளில்

## ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்

வழங்கியருளிய

# ஆசியுரைச் சுருக்கம்

ஆலந் தரித்தலிங்கம் ஆலவாய்ச் சொக்கலிங்கம்
மூலமாய் எங்கும் முளைத்தலிங்கம் — பாலொளியாம்
மத்தனே கூடல் மதுரா புரியுமையாள்
அத்தனே ஆலவா யா.

### கருணைத் திருநாள் :

இன்று ஆவணி மூலத் திருநாள்; தருமையாதீனத்தின் பெருநாள். இந்நாள் நாம் உயிரெனப் போற்றத்தக்கது. உயிர்க்கு உயிராக விளங்கும் சொக்கநாதப் பெருமான் அடியார்களுக்குப் பெருங்கருணை பாலித்தநாள் ஆவணிமூலத் திருநாள்.

### அருளியலும் உலகியலும் :

இறைவன் அடியார்களுக்கு இரங்கி அருள்பாலிக்கும் பெருங் கருணையுடையவன். குதிரை வாங்கச் சென்ற மாணிக்கவாசகர் திருவருள் வயப்பட்டுத் தன்னை மறந்த நிலையில், அரசாங்கப் பொருளில் திருக்கோயில் கட்டினார். தெரிந்து செய்தாலும், தெரியாமல் செய்தாலும் தவறுகளுக்கு ஆண்டவன் தண்டனை தந்தே தீருவான் என்பதனை மாணிக்கவாசகர் வரலாறு நமக்கு உணர்த்துகின்றது. மாணிக்கவாசகர் உபதேசப்பயனால் தன்னை மறந்து அறநெறிக்கு மாறாக அரசாங்கப் பணத்தால் கோயில் கட்டினார். என்றாலும் இறைபணிக்கு, அவனால் படைக்கப்பெற்ற அனைத்தையும் அர்ப்பணித்தல் பிழை இல்லை என்ற நோக்கு அவரது செயலில் வெளிப்பட்டது. ஆனால் உலகினரோ தவறு என்று தெரிந்தே பிழை செய்கின்றனர். ஆண்டவன் தண்டனை என்றேனும் அவர்களுக்குக் கிடைக்கும்.

### பரிமேலழகன் :

திருவருள் வயப்பட்டிருந்த மாணிக்கவாசகப் பெருமான், மன்னனது ஏவலர் வந்தபிறகே உலக நிலை உணர்ந்தார். இறைவனே தமக்கு உதவவல்லவன் என உணர்ந்து அவனையே வேண்டினார். செயலற்ற நிலையில் அன்போடு ஆண்டவனை வேண்டினால் இறைவன் இன்றும் நம்மிடையே தோன்றி அருள் பாலிப்பான். மாணிக்கவாசகர் இறைவனிடம் முறையிட்டார். இறைவன் குதிரை வீரனாகப் பரிமேல் எழுந்தருளினான். இது குறித்தே இறைவனைப் பரிமேலழகர் எனக் கூறும் மரபு தோன்றிற்று. திருக்குறளுக்குச் சிறந்த உரை எழுதிய உரையாசிரியர் பரிமேலழகர் என அறிவோம். அவர் உரையை ஆய்ந்தவர்கள் அவரை வைஷ்ணவச் சார்புடையவர் என்று கூறுவர். ஆனால், அவர் பெயரை நோக்கும்போது அவர் சைவர் என்றே கொள்ள இடமிருக்கிறது.

இவ்வாவணி மூலத் திருநாளில்தான் இறைவன் மாணிக்க வாசகருக்காக நரிகளைப் பரிகளாக்கிக் கொண்டுவந்து அருள் பாலித்தான். நரியைப் பரியாக்கியதும், பின் பரியை நரியாக்கியதும், பிட்டுக்கு மண் சுமந்ததும், வைகையில் பெருவெள்ளம் பெருக்கெடுக்கச்செய்ததும் சிவபெருமான் அன்புடை அடியார்க்கு எளியனாய் வந்து அருள்பாலிக்கும் தன்மையை விளக்கும் திருவிளையாடல்களாகும். இந்த அரிய திருவிளையாடற் செய்திகளைப் பரஞ்சோதி முனிவர் 'வாதவூரர்க்கு உபதேசித்த படலம்' முதலிய நான்கு படலங்களால் மிகச் சுவையாகப் பாடியுள்ளார்.

### மூலமாய் முளைத்தான் :

அடியார்களுக்கு அருள்பாலிக்கும் மதுராபுரிச் சொக்கநாதப் பெருமானைத் தமது ஆன்மார்த்த மூர்த்தியாகப் பெற்ற நமது ஆதீனக் குருமுதல்வர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் தமது சொக்கநாதப் பெருமானை 'ஆலந் தரித்த லிங்கம் ஆலவாய்ச் சொக்கலிங்கம் – மூலமாய் எங்கும் முளைத்த லிங்கம்' என்று குறித்தருளுகின்றார். உலகில் முதன் முதல் தோன்றிய மூர்த்தி மதுரைச் சொக்கநாதப் பெருமானே என்பதனை அப்பர் பெருமானும் 'முளைத்தானை எல்லார்க்கும் முன்னே தோன்றி' என்று போற்றுவதைக்கொண்டு ஆலவாய்ப் பெருமானின் தொன்மைச் சிறப்பினை உணருகிறோம்.

### மதுரைநிகர் தருமை :

நமது ஆதீனக் குருமுதல்வர் திருக்கரத்தில், மதுரைப் பொற்றாமரையினின்றும் 'கண்ணுக்கினிய பொருளாக'ச் சொக்க

நாதப்பெருமான் எழுந்தருளி வந்தான். ஞானசிரியராகிய கமலை ஞானப்பிரகாசரிடம் அருளுபதேசம் பெற்றார் ஸ்ரீகுருஞான சம்பந்தர். பின் தருமையில் திருமடம் கண்டார். 'இராமன் இருக்குமிடம் அயோத்தி' என்பது போல சொக்கலிங்கப் பெருமான் இருக்குமிடமெலாம் மதுரை என்றே கொள்ளத்தகும். இதனையே குமரகுருபர அடிகளும் பண்டார மும்மணிக்கோவை யுள் தமது ஞானசிரியராகிய ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிகரைப் போற்றுங்கால்

"தருமையும் கமலையும் விரிதமிழ்க் கூடலும்
திருநக ராக அரசுவீற் றிருக்கும்
மாசிலாமணித் தேசிகர்"

என்று குறித்தருளினர். மதுரையும் - கமலையும் (திருவாரூர்) தருமபுரமும் ஒருநிகர்த்தன்மையன என்ற குறிப்பை இதில் காணுகின்றோம். மேலும் மதுரையிலும் சித்திவிநாயகர்; தருமை யிலும் சித்திவிநாயகர், இவையும் இத்தொடர்பினை வலியுறுத்து வனவாகும்.

## தமிழறியும் பெருமான் :

இப்புனிதநாள் செந்தமிழ்ச் சொக்கர் திருவருள் புரிந்த நாள். சிவபெருமானே தலைச்சங்கத்தின் தலைமைப் புலவனாக அமர்ந்து தமிழாய்ந்த செய்தியைத் திருவிளையாடல் புராணம் உணர்த்துகிறது.

"கண்ணுதற் பெருங்கடவுளும் கழகமோ டமர்ந்து
பண்ணுறத் தெரிந்தாய்ந்த இப்பசுந்தமிழ்"

என்ற தொடர் தமிழுக்கும் - சொக்கநாதப்பெருமானுக்கும் இருந்த தொடர்பினை விளக்குகிறது. தலைச் சங்கப் புலவர்களுள் இறைவன் 'திரிபுரமெரித்த விரிசடைக் கடவுள்' என்று குறிக்கப் படுகிறான்.

"நன்பாட்டுப் புலவனாய்ச் சங்க மேறி
நற்கனகக் கிழிதருமிக் கருளினோன் காண்."

என்று அப்பரடிகளும் இதனைக் குறித்தருளுகின்றார்.

இறைவன் சுந்தரபாண்டியனாக நிலவுலகில் வந்து மதுரை மாநகரத்தில் ஆட்சிகொண்டு தமிழ்ச்சங்கத் தலைமையமர்ந்ததும், அம்மை தடாதகாதேவி என்று பெயர் தாங்கி மதுரையில் அவதரித்துத் தமிழ் வளர்த்ததும், குமரவேள் உக்கிரகுமாரன் என்று பாண்டிய நாட்டில் வந்துதித்துச் சங்கப் புலவனாய்

விளங்கியதும் தமிழின் சுவையைக் குடும்பத்தோடு ஒன்றாக இருந்து சுவைத்து மகிழவேண்டுமென்ற வேட்கையால்தான் எனக் குமரகுருபர அடிகள் குறித்தருளுகின்றார். இவற்றை எண்ணும்போது இறைவன் குடும்பத்தோடு தமிழ் வளர்த்த பாங்கு நன்கு உணரக்கிடக்கிறது.

சிவபெருமான் - முருகன் முதலியோர் சங்கத்தமர்ந்து தமிழாய்ந்ததனை வெறும் புனைகதையென்பார்களும் உண்டு. ஆனால் இறைவனேவந்து மொழிபோற்றிச் சங்கத் தலைமை ஏற்றுச் சிறப்பித்தான் என்பதுபோன்ற ஒரு கதையினைக்கூட பிற மொழிகள் கொண்டிருக்காத நிலைமையில், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ்மொழியின் வளர்ச்சியும் சிறப்பும் நன்கு புலனாகக் காண்கிறோம்.

## உண்மைகள் இரண்டு :

மாணிக்கவாசகர் வரலாற்றின் வழியே ஆலவாய்ச் சொக்கன் இரண்டு நிலையினை உலக உயிர்களுக்கு அறிவுறுத்தியருளுகின்றான். ஒன்று : இறைவனின் அடியாராயினும், அடியவர் வாழ்க்கை முறையில் எவ்வளவு தொண்டு செய்திருந்தாலும், அறத்திற்கு மாறான நிலையில் தவறு செய்பவர்கள் தண்டனை பெற்றே ஆகவேண்டு மென்பதனை குதிரை வாங்கக் கொண்டு சென்ற அரசின் பொருளைக்கொண்டு கோயில் கட்டிய மாணிக்க வாசகர் அரச தண்டனை பெற்றதன்வழி அறிவுறுத்தியருளினான். இரண்டு: ஆண்டவனாயினும் ஊதியத்தைப்பெற்று உழைப்பைச் சரியாகச் செய்யவில்லை என்றால் தண்டனை பெற்றே ஆகவேண்டு மென்பதனைப் பிரம்படிபட்ட திருவிளையாடலினால் உலகுக்கு உணர்த்தியருளினான்.

## திருவருட் குறிப்பு :

இந்நாள் தமிழோடு நெருங்கிய தொடர்புடைய இறைவனது திருநாள். இன்றைக்கு 26 ஆண்டுகளுக்கு முன் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் இந்தத் திருநாளில் தமிழில் சிறந்த புலமை பெற்றதக்கார் ஒருவருக்குச் சிறப்புப் பட்டம் அளித்து ஆசி வழங்கும் மரபினை ஏற்படுத்தியருளினார்கள்.

ஒவ்வொரு ஆண்டும் மார்ச்சு மாதத்தில் கொண்டாட வேண்டிய ஆதீனக் கல்வி நிலையங்களின் ஆண்டுவிழாவினை ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் கல்வியாண்டின் தொடக்கத்திலேயே வரும் ஆவணி மூலத் திருநாளில் இணைத்துக் கொண்டாடத் திருவுளங்கொண்டது ஆழ்ந்த நோக்குடைய தாகும். செந்தமிழ்ச் சொக்கனுக்கு இசைந்த திருநாளில்,

செந்தமிழ்வல்ல ஒருவர்க்குப் பட்டம் வழங்குவது மாணவர்களும் உள்ளக்கிளர்ச்சியடைந்து, தாமும் இங்ஙனம் உயர்ந்து பெருஞ் சிறப்புக்களைப் பெறவேண்டுமென்பதற்காகவேயாகும். இறைவனுக்கு உகந்த ஆவணி மூலத் திருநாளில் கல்வி நிலையங்களின் ஆண்டு விழாவினைக் கொண்டாடுவதும், இறைவன் தக்கார்க்குப் பொற்கிழி அளித்தருளியதுபோல, இந்நாளில் சான்றோர் ஒருவர்க்குப் பட்டமளித்துப் போற்றுவதும், அவர்கள் வழியே மாணவர்களுக்கு அறிவுரைகள்வழங்கச்செய்வதும் இத்திருவருட் குறிப்பினதேயாகும்.

## அருள்பெறும் அன்பர் :

இத்தகு பெருமைமிக்க திருநாளில் அன்பர் அ. வெ. ரா. கிருஷ்ணசாமி ரெட்டியார் செந்தமிழ்ச் சொக்கன் திருவருளால் இன்று 'செந்தமிழ்க் கவிதைச் செம்மல்' என்ற பட்டத்தைப் பெறுகிறார். திருச்சிராப்பள்ளியில் நல்லறப்பணிகள் பலவற்றை நெடுநாட்களாகச் செய்துவரும் அன்பர் அ. வெ. ரா. கிருஷ்ணசாமி ரெட்டியார் சிறந்த கவிஞர் - பேச்சாளர் - எழுத்தாளர் என்று மூன்று துறைகளில் சிறப்படைந்துள்ளார். வடமொழி செளந்தர்யலகரியை 'அழகு வெள்ளம்' என்ற தலைப்பில் கவிதை நூலாகச் செய்துள்ளார். எழுத்தாளன் என்ற பத்திரிகை ஒன்றையும் நெடுநாட்களாக நடத்திவருகிறார். வித்தகம்பேசாது பணிசெய்துவரும் தொண்டர் இவர். தாயுமானர் திருக்கோயில் குடமுழுக்கு விழாவில் பெரும்பங்கு வகித்தார்.

## 'செம்மல்' – விளக்கம் :

செந்தமிழ் வல்ல ரெட்டியார்க்குச் 'செந்தமிழ்க் கவிதைச் செம்மல்' என்ற பட்டம் பொருத்தமானதே. நினைக்கவேண்டுவதை நினைக்கும் உள்ளத்தைச் செம்மல்உள்ளம் என்று திருமுருகாற்றுப்படை பாராட்டுகிறது. 'சேவடி படரும் செம்மல் உள்ளமொடு' என்று குறிக்கிறார் நக்கீரர். தள்ளத்தக்கன தள்ளி கொள்ளத்தக்கன கொள்ளுவதே செம்மல் என்ற சொல்லால் குறிக்கப்படுகிறது.

ரெட்டியாரைப் பாராட்டிப்பேச அவரது ஊராகிய திருச்சிராப்பள்ளியைச்சார்ந்த, ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களால் திருக்குறள்வேள் என்ற பட்டம் பெற்ற திரு. ஜி. வரதராஜ பிள்ளை அவர்களே வந்துள்ளது பொருத்தமுடையதாகும். ரெட்டியார் எல்லாநலமும் பெற்று மேலும் நற்பணிகளில் ஈடுபட்டுச் சிறக்கச் செந்தமிழ்ச்சொக்கர் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

சிவதருமோத்தரக் கட்டுரை எண் 18,

# சுவர்க்க நரக இயல் —
# — பாவப் பயன்


தருமையாதீனப்புலவர், மகாவித்துவான்

**திரு. ச. தண்டபாணி தேசிகர்**


பழமையான நூல்களை, வேத ஆகம புராணங்களைப் பழித்தவர்களுக்கும், அதில் கூறும் அறங்களை இழித்துச் சொல்லியவர்களுக்கும், ஒன்றரைக் காத தூரம் நாக்கு வளரும். அதில் அவர் வருந்தும்படி யமதூதர்கள் இரும்புக் கலப்பையினல் உழுது துன்புறுத்துவார்கள்.

ஆகமவிதிகளை உபதேசித்த ஆசிரியனைக் கோபித்துப் பார்த்தவர்களும் அதட்டியவர்களும் ஆகிய பாவிகள் முகத்தை அட்டைகள் குடையும். அதன்பின் யமதூதர்கள் வந்து காய்ச்சிய காரநீரையும் உருக்கின செம்பையும் முகத்தில் ஊற்றுவார்கள். தத்தம் மரபுக்கு ஏற்ற ஒழுக்கங்களில் இருந்து தவறியவர்களை, யமதூதர்கள் பித்தளையை உருக்கி அவர்கள் மேலே ஊற்றித் துன்புறுத்துவர். காய்ச்சிய எண்ணை அண்டாவினும் விடுவர். புழுத்து நெளிகின்ற மலச் சேற்றிலே அழுத்துவர். பெற்ற தாய்தந்தையர்களும பெரியோரும் குற்றமே செய்தாலும் அதனைப் பாராட்டாது இருப்பதே நல்லது. அங்ஙனம அன்றி வைதவர்களும் அடித்தவர்களும் முன்சொன்ன நரகங்களிலே நெடுங்காலம் விழ்ந்து வருந்துவார்கள். பெரியோர்களை மதிக்காமல் அவர்களுக்கு முன்னே பாதக்குறடு செருப்பு முதலியவற்றைப் போட்டுக்கொண்டு நடப்பவர்களை யமதூதர்கள் தீவாய் நரகத்தில் தலைகீழாகப் போட்டு இருப்பு முளைகளை நெருக்கி அடித்த தடியினலே முதுகிலே அடிப்பார்கள்; கோடரியால் வெட்டுவார்கள் இரக்கம் இன்றி உணவுக்காக ஆடு மாடு முதலிய விலங்குகளையும் கொக்கு கோழி முதலிய பறவைகளையும் கொன்று தின்பவர்கள் முன்கூறிய நரகங்களில் விழ்ந்து வருந்துவர்.

பசித்து வந்தவர்களுக்குச் சோறு போடாமல் அவர்களை வெளியே காக்கவைத்து விட்டுத் தனித்து இருந்து புசிப்பவர்களும் தாகமுற்றவர்களுக்குத் தண்ணீர் தராதவர்களும் ஆகிய

பாவிகளை யமதூதர்கள் அவர்களை வெட்டி அவர்கள் இரத்தத்தை அவர்களே குடிக்கும்படி செய்வார்கள்; மேலும் பனங்காட்டிலே உடல் புண்படும்படி இழுத்துச் செல்வார்கள். பழுக்கக் காய்ச்சிய ஊசியை உடலிலே செலுத்துவார்கள்; சூலத்தால் குத்துவார்கள். இன்னும் பலவகையால் துன்புறுத்துவர்.

### பிறனையும், பிறர் மனையையும் நயப்பவர்கள் எய்தும் பாவங்கள் :-

பிறர் மனைவியை விரும்புகின்றவனைப் பழுக்கக் காய்ச்சிய இரும்புப் பாவையை தழுவச் செய்வர். அங்ஙனமே அயலானைத் தழுவும் பெண்ணையும் தண்டிப்பார்கள். எப்போதும் கணவனை விட்டுப் பிரிந்து இருக்க விரும்பிய பேதையை அப்பாவம் போகின்ற வரையில் அழற்பாவையை அணையச்செய்வர். இரும்புக் குளத்தில் நுழையச்செய்து அதன் வாயை அடைத்துக்கனல் மூட்டுவர். உரலில் இட்டு இடிப்பார்கள். உடலும் மூளையும் சிதற அடிப்பார்கள்; இருண்ட கிணற்றிலே இடுவார்கள். வண்டுகளுக்கு உடலை உணவாகச் செய்வர். துளைக்கச் செய்வர். எரிவாய் நரகத்தில் கிடந்து உடல் உருக கருகச் செய்வார்கள்.

குரு லிங்கம் சங்கமம் ஆகிய மூவருக்கும் ஏவல் செய்யக் கூசினவர்களையும், அவர்களைக் கோபித்தவர்களையும், ஆடை திருடியவனையும் யமதூதர்கள் பாசக் கயிற்றினால் கட்டிப்போட்டு அவர்கள் மேல் காட்டுத் தும்பிகளை ஏவுவார்கள். நெருப்பில் போடுவார்கள். விராட்டித் தழலில் இடுவார்கள். புழுத்த குழியில் தள்ளுவார்கள். மீள எடுத்து நாற்றம் பொருந்திய அழுகல் மாமிசம் நிறைந்த குழியில் இடுவர். இரண்டு பாறைகளுக்கு இடையில் வைத்து நெருக்குவார்கள்.

அயலார் அன்பில்லாமல் இடும் அன்னத்தைப் புசித்தவர்களை யமதூதர்கள் இரும்பு உருண்டைகளை விழுங்கச் செய்வார்கள். இரத்தம் ஒழுகச் சவுக்கடி கொடுப்பார்கள், கோயில் முதலான புனிதமான இடங்கள், தீர்த்தக்கரை, புண்ணிய நதிக்கரை, திருமடம், பலர் நடக்கும் தெரு, நந்தவனம் இவைகளில் மலம் கழித்தல், எச்சில் உமிழ்தல், மாதரைப் புணர்தல் முதலிய இழி தொழில் செய்தவர்களைச் செக்கிலே இட்டு அழிப்பர். எத்தனை விதமான நரகங்கள் உண்டோ அத்தனையிலும் விட்டு அழிப்பர்.

தனது ஆசிரியனையும் குருவையும் ஒருவன் நிந்திக்க அதனை விருப்பத்தோடு கேட்டவர்களும், கூட வைதவர்களும், சிவயோகிகளுக்கும் தபோத குணம் உடையவர்களுக்கும் தீமை செய்தவர்

களும் காதில் உருக்கிய செம்பை ஊற்றி வாயில் ஆப்பை கடாவி நரகத்தில் வீழ்த்தப்படுவார்கள். அங்ஙனமே பிறர் மனைவியை விரும்பியவர்களையும் வருத்துவார்கள்.

ஆசாரியரைக் கோபத்தோடு பார்த்தவர்களையும், சிவபூஜை, அக்கினி காரியம், விருந்து ஓம்பல் இவற்றைச்செய்யாதோரையும் யமதூதர்கள் நெற்றி கண் காது இவைகளில் காய்ச்சிய ஊசியால் குத்தித் துன்புறுத்துவார்கள். பஞ்சலோகத்தைக் காய்ச்சிக் காதில் ஊற்றுவார்கள்.

சிவன் கோவிலுக்கு உரிய நந்தவனத்தில் உள்ள பூக்களை முகர்ந்தோரும், தலையில் சூடிக்கொண்டவரும் ஆகிய பாவிகளை யமதூதர்கள் அவர்கள் தலையில் இருப்புமுளையை அடித்து மூக்கை அறுத்துக் காரம்இடுவார்கள். சிவன்முதலிய கடவுளரையும் சவாகமத்தையும் நிந்தித்தவர்கள் வாயிலே இருப்பாணியைக் கொண்டு அடிப்பர். பல் உதடு இவைகளில் இரத்தம்சிந்தத் தலையிலும் மார்பிலும் முழங்கை முழங்கால் கணுக்கால் மூக்கு இவைகளில் காய்ச்சிய இருப்பு முளையை அறைவார்கள். பிறர் பொருளைக் கவர்ந்தவரையும், அந்தணர், கடவுளர், இவர்களுக்கு உரிய பொருள்களைக் கால்படச் செய்தோரையும் யமதூதர்கள் நெருப்பு அண்டாவிலே வீசி எறிவர்; உருக்கிய செம்பை எடுத்து மேலே ஊற்றுவர். எத்தனைவித நரகம் உண்டோ அத்தனையிலும் விழ்த்துவர்.

கோவில்களில் மலசலம் விழ்த்தவர்களை யமதூதர்கள் கண்டதுண்டமாக வெட்டுவர். காய்ச்சிய ஊசியைக்கண்ணில் குத்துவர். கொழுந்துவிட்டு எரியும் தீயில் போடுவர் செம்பை உருக்கி மேலே ஊற்றுவர். பணம், பண்டம் இதை மிகப்பெற்றும் பெரும் அளவு தானம் செய்யாதவர்களைக் கூர்மையான இருப்புமுளைகளை வைத்து அவர்கள் கழுத்தில் அடிப்பார்கள். காலையும் கையையும் வெட்டி இருபக்கமும் பறக்கவிடுவார்கள். தலை, நெற்றி, மார்பு, கால் இவைகளில் இருப்பு முளையை வைத்து அடிப்பார்கள். வாயில் புழுத்து நெளியவும் மூக்கைக்காக்காய் கொத்தவும் நாவில் காய்ந்த இரும்பு உருண்டை பலவற்றை இடுவர். அறவழியில் பொருள் செய்து அறவழியில் செலவழிக்காதவர்களின் மர்மஸ்தானங்களில் இருப்புச் சங்கிலியைக் கட்டி அதன் நுனியில் இரும்புக்குண்டைக்கட்டித்தொங்கவிடுவர். காலிலேவிலங்கிடுவர். உடலை எள்ளளவாக அறுத்துத்தின்னச் சொல்வார்கள். இறுதியாக எரிவாய் நரகத்துத் தள்ளுவார்கள். அளவில் அடங்காத நரக வேதனையை அடையச் செய்வார்கள். அதிபாதகம் முதலிய பாதகத்தைச் செய்தோர் இருபத்தெட்டு கோடி நாளனுள் பிரம பிரளயம் வரையில் கிடந்து வருந்துவர்.

பஞ்சமா பாதகம் செய்தோர் ஐந்நூறு சதுர்விகம் நரகத்தில் கிடப்பர். உப பாதகம் செய்தோர் ஏழேழு கோடி நரகத்திலே இருநூற்று ஐம்பது சதவீதமும் அதிற் குறைவான பாதகம் செய்தோர் மூன்றரை கோடி நரகத்திலே நூற்று இருபத்தைந்து சதவீதமும் கிடந்து வருந்துவர். இங்ஙனம் பாதகர் வருந்த, சிவஞானிகள் தவறிப் பாவ பலத்தைச் செய்வார்களாயில் பாவ பலத்தை அடையமாட்டார்கள். அவர்கள் எண்ணம் சிவபெருமானிடமே உள்ளதால் பாவம் அவர்களைப் பற்ரு என்று கூறி பாவ நரகங்களைப் பற்றியே சொல்லிவந்த பாவம் தீர சிவன், குமரன், அகத்தியர் முதலியோர்க்குத் துதி சொல்லிச் சொர்க்க நரக இயலை முடிக்கின்ருர்.

## நான்போனுல் போகலாம்

இறைவன் திருவடியைச் சென்றடைய யாரால் இயலும் என்பது பற்றிச் சுவையான விவாதம் ஒன்று, காலஞ்சென்ற இராமநாதபுரம் மகாராஜா பாஸ்கர சேதுபதி அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. புலவர்கள் பலரும் இறைவனடி சேர்வதற்குத் தத்தமக்குத் தெரிந்த வழிமுறைகளைக் கூறிவந்தனர். அவரவர்களும் விரிவாக சாத்திர-தோத்திர நெறிகளைக் கூறிக்கொண்டிருந்தனர்.

மகாராஜா சட்டென்று "நான்போனுல் போகலாம் மோக்ஷசத்திற்கு; வேறுயாராலும் முடியாது என்று புலவர்களை நோக்கிக் கூறினுர். புலவர்கள் தாங்கள் மகாராஜா என்பதால்தானே இங்ஙனம் கூறுகின்றீர்கள் என்று கேட்டுக் குமைந்தனர். மகாராஜாவோ ஆணவத்தோடு நாம் கூறவில்லை என்றும் 'நான்' என்னும் அகங்காரம் போனுல் இறைவன் திருவடி கிடைக்குமென்றே குறிப்பிட்டதாகவும் கூறி அனைவரையும் வியப்பில் ஆழ்த்தினுர்.

நான் என்ற அகங்காரமும், எனது என்ற மமகாரமும் நீங்கினுல் இறைவனடி சித்திக்குமென்பது சாத்திர உண்மை. இதனையே திருவள்ளுவரும்,

"யான் எனது என்னும் செறுக்கறுப்பான் வானேர்க்கு
உயர்ந்த உலகம் புகும்"

என்று விளக்குவார்.

# வள்ளலார் கோயில்

## திரு என். ராமகிருஷ்ணு

இத்தலம் மாயூரம் துலாகட்டமாகிய இடபதீர்த்தக்கரையில் வடபக்கத்திலே உள்ளது. இத்தலத்துக் காவிரித் தோற்றமும், வடகரைக்கண் வரவேற்று நிற்கும் தீர்த்த மண்டபமும் சிறிய கோபுரமும் மிக அழகு செய்கின்றன. சுவாமியின் பெயர் வழிகாட்டும் வள்ளல். வடமொழியில் வதாந்நியேசுவரர் என்று வழங்கப்படுவர். அம்மையார் ஞானம்பிகை சுவாமியின் கர்பக் கிரகத்தின் தென்பக்கத்து தக்ஷிணுமூர்த்தி எழுந்தருளி யிருக் கின்ருர். இங்கு தக்ஷிணுமூர்த்தி மிக விசேஷம். தக்ஷிணுமூர்த்தி யோகாசனத்து ஞானமுத்திரை கையராக எழுந்தருளி யிருக் கின்ருர். ஏனைய தக்ஷிணுமூர்த்திகளைக்காட்டிலும் இந்த மூர்த் திக்கு உள்ள சிறப்பு நந்திபெருமான்மீது அமர்ந்து இருப்பதே.

தீர்த்தம் ஞானமிர்தசரஸ். இந்த தீர்த்தம் பிரம்மாவால் தோண்டப்பட்டது என்பது புராணம். பஞ்ச பிரம்மலிங்கங்கள் பிரதிஷ்டை செய்யப் பெற்றமையின் பஞ்சபிரம்ம தீர்த்தம் எனவும் பெயர் உண்டு. கார்த்திகை சோமவாரத்தில் நீராடி வதாந்நியேசுவரரையும், ஞானம்பிகையையும் வழிபட்டு தக்ஷிணு மூர்த்தியை வணங்கினவர் பொன்னையும், மெய்ப்பொருளையும் எய்துவர்!

இடபதேவர் இறைவனைத் தாங்கும் புண்ணியமும் வன்மை யும் பெற்றதால் தானே சிறந்தவர் என்று துள்ளினர். இறை வன் இதை உணர்ந்து இடபதேவருக்கு ஞானம் கைவரச் செய்ய வேண்டுமென்று எண்ணித் தன் ஜடாபாரத்து நுனியொன்றை எடுத்து இடபத்தின்மீது போட்டார். இடபதேவர் அதன் சுமையைத் தாங்க முடியாமல் இறைவனை நோக்கித் தன்பிழையை பொறுத்தருள வேண்டும் என்று வேண்டினர். இறைவன் மனமிரங்கி அவருக்கு ஞானேபதேசம் செய்தார். குருமூர்த்தி யாக இருக்கும் நிலையில் வாகனமாக ஏற்று மகிழ்ந்தார். இதை

மாயூரம் தலபுராணத்தில் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் விளக்கியுள்ளார்கள்.

" மனிதவ பெருமை காட்டி வயங்கிடு மற்றோர் கூற்றில்
பொலிதரு சேமேற் கொண்டு தென்முகம் பொருந்த நோக்கி "

## காவிரித்தீர்த்த விசேடம்

கண்ணுவ மகரிஷி ஒருகாலத்தில் கங்கையில் நீராடவேண்டும் என்று சென்றார். உத்தர மாயூரம் தாண்டிச் செல்லும்போது மூன்று பெண்கள் இவர்களை வழிமறித்தனர். அவர்கள் ஒளி இழந்த முகத்துடன் காணப்பட்டனர். கரிய மேனியுடன் அழுக்கடைந்து காணப்பட்டனர். முனிவர் எங்கு சென்றாலும் அவர்கள் வழிமறித்தனர். முனிவர் கோபம்கொண்டு காரணம் கேட்க, பல மக்கள் தத்தம் பாவங்களை ஒழிக்க தம்முள் மூழ்கியதால் தாங்கள் ஒளி இழந்ததாகக் கூறினர். அவர்கள் யாருமல்ல. கங்கை, யமுனை, சரஸ்வதி என்ற நதிகள். அவர்கள் அங்கு யாது செய்கின்றனர் என்று வினவ உத்தர மாயூரத்தில் காவிரியில் நீராடித் தங்கள் பாவங்களை போக்கிக்கொள்ளச் செல்வதாகக் கூறினர். இத்தலத்தின் பெருமையை விளக்க முனிவர் கங்கை செல்லும் எண்ணத்தை விட்டு மாயூரம் வந்து ஞான தீர்த்தக் கரையில் ஆசிரமம் அமைத்து, கங்கை சொன்ன முறைப்படி நீராடிப் பயன் பெற்றார்.


விஷ்ணு இத்தலத்தில் வழிபட்டு பிருகு முனிவர் மனைவியைக்கொன்ற பாவத்தைப் போக்கிக்கொண்டார். அகத்தியர் வழிபட்டார். பிரமன் படைப்புத்தொழில் கைவரப்பெற்றான்.

இத்தலம்பற்றி நூல்கள் அதிகம் கிடையாது. வடமொழியில் "உத்திர மாயூர மகாத்மியம்" என்ற நூலில் உபதேசம் அருளிய அத்தியாயம் உள்ளது. தமிழில் திருசிரபுரம் மகாவித்துவான், மீனாட்சிசுந்தரம் பிள்ளை இயற்றிய "மாயூரம் தல புராணம்" இதை விளக்குகின்றது.

தருமை ஆதீனம் 10 ஆவது குருமூர்த்திகள் ஸ்ரீசிவஞான தேசிகர் அருளிய திருவருட்பா ஒன்று உளது. அது 10 பாடல்களை உடையது. இதற்குத் தக்ஷிணாமூர்த்தித் திருவருட்பா என்று பெயர்.

பிரதி வியாழக்கிழமையும் இங்கு விசேடம். தக்ஷிணாமூர்த்தி சிறப்பாக அலங்கரிக்கப்பட்டுத் தங்கக் கவசத்துடன் காட்சி அளிப்பார். கார்த்திகை மாதத்தில் தக்ஷிணாமூர்த்திக்குச் சிறப்பான அபிஷேகம் நடைபெறும் பல ஊர்களிலிருந்து மக்கள்


[ தொடர்ச்சி 622-ஆம் பக்கம் பார்க்க ]



தருமையாதீனம்
ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள்
திருக்கயிலை தெற்குமுகதரிசனம் செய்தருளல்

தருமையாதீனம்


ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களுக்குத்



திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம்

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

பொன் மலர்களால் அபிஷேகம் செய்தல்.



தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள்
ஸ்ரீ காசி விசுவநாதரைத் தரிசித்தல்

தருமையாதீனம் ஸ்ரீ ஆனந்தபரவசர் பூங்காவில்
ஸ்ரீ காசி விசுவநாதர் திருக்கோயில் விமான வடிவில்



ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி குருமூர்த்த ஆலய விமானம்

# திருவையாற்றுப் பதிற்றுப்பத்தந்தாதி

## மூலமும் - உரையும்

உரையாசிரியர் :-

பண்டித வித்துவான், தருமையாதீனத் தமிழ்ப்புலவர்

**திரு. இராம. கோவிந்தசாமிப் பிள்ளை**

( மலர் 32. இதழ் 9. பக்கம் 474 இன் தொடர்ச்சி )

73. விமல பற்பல கவலை கொண் டிடருறு வினையேன்
முமல வேரறுத் தாளுநாள் என்றரோ மொழியாய் !
கமல வாவினின் றெழுமிள வாளைபூங் கமுகோ(டு)
அமல மேகமுங் கிழிக்கும் ஐயாற்றிறை யவனே.

( சொ - ள் ) விமல - அநாதி மல முத்த சித்துருவான வரே ! (தூயவரே), கமல வாவின் நின்று - தாமரைத் தடாகங் களினின்றும், எழும் இள(ம்) வாளை பூ - எழுகின்ற இளமை யாகிய வாளை மீன்களானவை, பூம் கமுகோடு - பாளை விரிந்து நிறைந்த பூக்களையுடைய கமுக மரங்களோடு, அமல் அம்மேக மும் கிழிக்கும் - நெருங்கிய நீரையுண்ட (கரிய) மேகங்களையும் கிழித்தோடும் வளம் மிக்க, ஐயாற்று இறையவனே - திருவையாற் றுப் பெரும்பதித் தலைவரே ! பல்பல கவலைகொண்டு இடர்உறு வினையேன் - பலப்பல கவலைகளை மேற்கொண்டு துன்பங்களை அடையும் தீவினையேனுடைய, மும்மலம் வேர் அறுத்து - மூவகை யான மலங்களின் வலிய வேரினை (மேற்கொண்டு பற்றுதவாறு) அறுத்து, ஆளும் நாள் என்று - அடியவனை ஆட்கொண்டரு ளும் நாள் என்றைக்கோ (அறியேன்) எ - று.

( கு - ரை ) பலப்பல - பற்பல ; எண்ணிறந்தன. கவலை - வருத்தம். இடர் - இடர்ப்பாடு. மும்மலம் - மூவகைக் கட்டு (தளை). வேர் அறுத்தல் - பாசவலி கெடுத்தல். அரோ - அசை நிலை. கமலம் - தாமரை. வாவி - தடாகம். அமல் - நெருக்கம். அம் - நீர். கிழிக்கும் - பிளக்கும். இறையவன் - கடவுள். ஏகாரம் விளி. மொழியாய் - திருவாய் மலர்ந்தருள்வாய். பாசத்தளை யறுத்தால் ஒழிய - பிறவி வேர் அறுக்க முடியாது. ஆளுவாய் - ஆட்கொண்டருளுவாய். விமல, கமல என்பன வடமொழிச் சொற்கள். மும்மை மலம் என்பது மும்மலம் என வாயது. ஆணவம், கன்மம், மாயை என்பனவாம்.

" பாளையுடைக் கமுகோங்கிப் பன்மாடம் நெருங்கி யெங்கும்
வாளையுடைப் புனல்வந்தெறி வாழ்வயற் றில்லைதன்னுள்
ஆளவுடைக் கழற் சிற்றம்பலத் தரனாடல் கண்டாற்
பீளையுடைக் கண்களாற் பின்னைப்பேய்த் தொண்டர்
காண்பதென்னே "

எனும் அப்பர் திருவிருத்தக் கருத்தை யொட்டிப் பாடியதாகும் இச்செய்யுள்.

74. அவனி மீதினிற் கொடுமைசெய் திடுமடி யேன்முற்
பவமு நீங்கிடப் பரிந்துள மீதெழிற் பதும
நவமி குங்கழல் வைத்தநின் கருணையென் நவில்வேன்
தவம லிந்தவர் மிகுமையாற் றொளிர்சசி தரனே.

(சொ - ள்) தவம் மலிந்தவர் மிகும் ஐயாற்று ஒளிர் சசி தரனே - சரியை, கிரியை, யோகங்களாற் பதமுத்தி யெய்துதற் குரிய தவநெறிச் செல்வர் நிறைவுற்ற திருவையாற்றின்கண் பேரொளிப் பிழம்பாய் விளங்குகின்ற பிறைச் சந்திரனைச் சடா மகுடத்திலணிந்தருளிய பெருமானே!, அவனி மீதினில் கொடுமை செய்திடும் அடியேன் - கரும பூமியாகிய இந்நிலவுல கினில் தீய செயல்களாகிய கொடுமைகளையே ஆற்றும் அடிய னேன், முன்பவமும் நீங்கி - முன்னைப்பிறப்புக்களிற் செய்திட்டிய வினைகளும் நீங்கிடுமாறு (ஒழியும்படி) அல்லது இப்பிறப்பில் செய்து ஈட்டிய வினைகளால் வரும் எதிர்காலத்து வந்து எய்தப் பெறும் பிறப்புக்களும் நீங்கிடுமாறு, பரிந்து - விரும்பி, உளம் மீது - எளியேனுடைய மனத்தின்கண் (உள்ளுதலால் உளம் ஆம்), எழில் பதுமம் நலம் மிகும் கழல் வைத்த - எழுச்சிமிக்க தாமரை மலராகிய புதுமை மிக்க திருவடிகளை வைத்தருளிய, நின் கருணை என் நவில்வேன் - தேவரீருடைய திருவருட்சிறப் பினை என்னென்று இயம்பவல்லேன் (எ - று).

(கு-ரை) பதுமம் - தாமரை மலர். நவமிகும் - புதுமை மிக்க. கழல் - திருவடி. நவில்வேன் - இயம்புவேன். தவம் - சரியை, கிரியை, யோகம் முதலியவற்றால் பதமுத்தி (பேரின்ப மாகிய வீடு) எய்துதற்குரிய நிலை. கொடுமை செய்திடும் - தீய செயல்களாகிய கொடுமைகளையே ஆற்றும். பவமும் - முன்னைப் பிறவியின்கண் செய்த வினைகளும், இப்பிறப்பில் ஆற்றிய வினை களும் எதிர்காலத்து வந்து எய்தப்பெறும் பிறப்புக்களும். பரிந்து - விரும்பி.

" இருள்சேர் இருவினையுஞ் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு "

என்ற குறட்பா ஒப்புநோக்கற்பாலது.

75. தரணி யோர்பணிந் தேத்துநின் றாமரைச் சரணம்
சரண நாயினேன் உய்ந்திட வருளுதி தக்கோய் !
முரணு றுங்கவி பாய்ந்திடு மருங்கெலா முகில் தூங்(கு)!
அரணி சூழ்தரு பேரெழிற் றிருவையாற் றரனே.

(சொ - ள்) தக்கோய் ! - அறிவுவாய்ந்த அறிஞர்களால் தருக்க முதலிய அளவை நூல்களால் தக்கார் இவரேயென கொள்ளப்பட்ட பெருமானே !, முரண் உறும் - வலிமை மிக்க, கவி பாய்ந்திடும் மருங்கு எல்லாம் - குரங்குகள் பாய்ந்து விளை யாடும் (மதில்) பக்கங்களிடத்து எல்லாமும், முகில் தூங்கும் அரணி - மேகங்கள் வந்து படிந்திருக்கும் மதில்கள், சூழ்தரு - சூழ்ந்திருக்கின்ற, பேர் எழில் திரு ஐயாற்று அரன் ஏ - மிக்க வனப்பு அமைந்த திருவையாற்றுப் பதியின்கண் எழுந்தருளிய சிவபரம் பொருளே ! (தேவரீரை) தரணியோர் பணிந்து ஏத்தும் நின் தாமரை சரணம் - விண்ணவரே அல்லாமல் மண்ணவரும் தாம் எடுத்த பிறவியின் பயனைப் பெறுவான் வேண்டி மறவாமல் வணங்கித் துதிக்கும் தேவரீரின் தாமரை மலராகிய திருவடிகளையே பற்றுக்கோடாக, நாயினேன் - ஏழை யடியனேன் (கொண்டுளேன்), உய்ந்திட அருளுதி - பிறவிக் கடலினின்று தப்பிக் கரையேறத் திருவருள் புரிந்தருள்க (எ-று).

(கு - ரை) "புலனைந்தும்" தேவாரத் திருப்பாட்டில் 'சிலமந்தி அலமந்து மரமேறி முகில் பார்க்கும் திருவையாறே', என வந்துள கொண்டு "முரண் உறும் கவிபாய்ந்திடு மருங் கெலா முகில் தூங்கும் அரணி" என்றார் போலும். பேரெழில் - மிக்கவனப்பு. தரணியோர் - மண்ணவர். சரணம் - பற்றுக் கோடு. உய்ந்திட - கடைத்தேறிட. அருளிதி - திருவருள் புரிந் தருள்க. கவி - குரங்கு.

76. அரவு லாம்புரிச் சடிலநிற் போற்றவெற் கருள்வாய்
பரவு தேம்பலாக் கனிகவி பறித்திடப் பண்ணை
விரவு மாறுழுங் களமர் வெண்புரிகொடு வீச
உரவு தென்(தெங்கிள)ளிள நீரெறிந் திடுமையாற்
றுறைவோய்

(சொ - ள்) அரவு உலா(வு)ம் புரி சடில - அணிகளாக் கொண்ட பாம்புகள் உலாவுதலைச் செய்கின்ற முறுக்குகளை யுடைய செஞ்சடைத் தேவரே !, பரவு தேம் பலா கனி கவி பறித்திட - எங்கும் பரவிய இனிய தேன் போல் இனிக்கும் பலாவின் பழத்தினைக் குரங்குகள் பறித்தலைச் செய்ய (அதனைக் கண்டு ஓச்சுதற்கு), பண்ணை விரவு மாறு உழும் - மருத நில மாகிய வயலிடங்களை (மேலுங் கீழுமாகப் புழுதி) கலக்குமாறு உழு

கின்றவர்களாகிய, களமர் - (உழவர்) மள்ளர்கள், வெண் புரி கொ(ண்)டு - வெண்மை நிறமுடைய சங்குகளை வாரியெடுத்து, வீச - வீசியெறியவும், (அதனைக் கண்ட குரங்குகள்) உரவு தென் இளநீர் எறிந்திடும் - (அக்களமர் மீது) வலிய தென்னை மரங்களிலுள்ள இளநீர் ஆகிய காய்களைப் பறித்து வீசிடும் வளமிக்க, ஐயாற்று உறைவோய் - திருவையாற்றின்கண் எழுந்தருளிய மகாதேவரே, நின் போற்ற அருள்வாய் - தேவரீரை போற்றியுய்ய அதற்குரிய நெறியினை அருளுவாய் (எ - று).

(கு - ரை) "குரங்கெறி விளங்காய்" எனும் பழமொழியினையுள்ளடக்கியுள்ளது. குரங்கு எறிந்த பொருளானது விளங்காத தன்மையுடையது அரவு - பாம்பு. தேன்பலா என்பது தேம்பலா எனவாயது. கவி - குரங்கு. பண்ணை - மருத நிலத்து வயல்கள். விரவு - கலக்குமாறு. களமர் - உழவர் (மள்ளர்) வெண்புரி - வெண்மை நிறமுடைய சங்கு. கொண்டு என்பது கொடு எனவாயது. உரவு -வலிமை.

77. உறையு நெய்தன் மொக்குளை யாரத் தலையென வுன்னி
நிறைய ணங்கொடு பிள்ளையங் குருகழ நிசியிற்
சிறையி னுற்றழீஇப் பேடுறக் கைந்நதி திகழும்
இறையுன் சீரடி யேதுணை காத்தருள் எனையே.

(சொ - ள்) உறையும் நெய்தல் மொக்குளை அரா தலை என உன்னி - நீரினையுடைய தடாகங்களில் முளைத்திடும் அல்லியின் அரும்புகளை பாம்புகளின் தலைகள் எனக்கருதி, நிறை அணங்கு ஒடு பிள்ளை அம் குருகு அழ - மிக்க அச்சத்துடன் இளமையாகிய அழகிய அ னத்தின் குஞ்சுகள் கண்டு அழுதலைப் புரிய (கதற) அதனைக் கண்ட, பேடு - பெட்டையன்னப் பறவைகள், நிசியில் - இரவின்கண், சிறையினால் தழீஇ உறங்கும் - இறகுகளினால் அக்குஞ்சுகளை அணைத்து தழுவுதலைச் செய்யும் (தழுவியுறங்குபடிச் செய்யும்), ஐந்நதி திகழும் - திருவையாற்றின் கண் ஒளியுருவாய் விளங்கிடும் இறை - தேவதேவரே, உன் சீர் அடியே துணை - தேவரீருடைய திருவடிகளே பற்றுக்கோடாகும். எ(ன்)னை காத்தருள் - அடியவனை அகற்றிடாது பிறவிப் பெரும் பிணி நீக்கிக் காத்தருள்க (எ - று).

(கு - ரை) அம் குருகு - அழகிய அன்னம். நிசி - இரவு. சீரடி - சிறப்பு மிக்க திருவடி. காத்தருள் - பிறவிப் பிணியால் ஏற்படும் துன்பங்கள் உண்டாகாதவாறு காப்பாற்றி அருள்க. என்னை என்பது எனை என இடைக்குறையாயது.

(தொடரும்)

# அப்பர் வகுத்த இலக்கிய மரபுகள்

டாக்டர். திரு. சொ. சிங்காரவேலன் எம். ஏ., பிஎச். டி.

(மலர் 32. இதழ் 10. பக்கம் 562 - இன் தொடர்ச்சி)

2. 2: 'தாண்டகம்' என்ற புதிய மரபினை அப்பர் தோற்றுவித்துள்ளார்; 6 பல்லவர் கால இலக்கிய உலகிற்கு அப்பரடிகள் வகுத்துத்தந்த புதியவடிவம் இது. எண்சீர் விருத்தங்களைச் சற்றேறக்குறைய ஒத்துள்ளன தாண்டகப்பாக்கள். வடமொழியாளர்கூறும் தண்டகத்திற்கும் இவ்வகைக்கும் சிறிதும் தொடர்பு இல்லை என்றே அறிதல் வெண்டும். (யாப்பருங்கல விருத்தி - பக்கம். 447.) தமிழ்ச் செய்யுள்வகையுள் ஒன்றாகிய இந்த யாப்பிற்குத் திருநாவுக்கரசர் அருளிய தாண்டகப் பதிகங்களே மூல இலக்கியங்கள் ஆயினமையின் "தாண்டகச்சதுரர்" "தாண்டக வேந்தர்" என்று இவரைப் பல்லவர்காலத் தமிழ் உலகு பாராட்டிப் போற்றியது.

இந்தத் 'தாண்டகம்' என்ற யாப்பு வகையில் அடிதோறும் நான்கு, எட்டு ஆகிய சீர்கள் 'தேமா' வாகவும், மூன்று, ஏழு ஆகிய சீர்கள் பெரும்பான்மையும் தேமாவாகவும் சிறுபான்மை புளிமாவாகவும் அமையும்; ஏனையவை (ஒன்று, இரண்டு, ஐந்து, ஆறு ஆகிய சீர்கள்) பெரும்பான்மையும் காய்ச்சீர்களாகவும், சிறுபான்மை மாச்சீர் விளச்சீர்களாகவும் அமையும். எண்சீரால் வரும் இத்தாண்டகப் பாவில், அடிதோறும் மூன்று, நான்கு, சீர்களையும் இணைத்து நோக்கினால் அப்பாடல் கொச்சகக்கலிப்பா என்ற யாப்புருவத்தில் அமைதலைக் கற்றோர் உணர்ந்து இன்புறலாம். 7

"எம்பந்த வல்வினைநோய் தீர்த்திட் டான்காண்
ஏழ்கடலும் ஏழுலகும் ஆயி னான்காண்
வம்புந்து கொன்றையந்தார் மாலையான்காண்
வளர்மதிசேர் கண்ணியன்காண் வானோர் வேண்ட

---

6 அப்பர் தேவாரம் - தேவாரப் பதிகங்கள் - 2086 - 3066 பாட்டுக்கள்.

7. யாழ்நூல் - விபுலானந்த அடிகள் பக். 219.

அம்பொன்ருல் மூவெயிலும் எரிசெய் தான்காண்
அனலாடி யானஞ்சும் ஆடினன்காண்
செம்பொன்செய் மணிமாடத் திருவாரூரில்
திருமூலட் டானத்தெஞ் செல்வன் தானே." 8

இத் திருத்தாண்டகத்தில், அடிதோறும் மூன்று, நான்கு, ஏழு, எட்டு ஆகிய சீர்களை விலக்கி ஏனைய நான்கு சீர்களையும் சேர்த்து நோக்கினல், பின்வருமாறு கொச்சகக்கலிப்பாவின் வடிவம் ஒன்று உருவாவதைக் காணலாம்.

" எம்பந்த வல்வினை நோய் ஏழ்கடலும் ஏழுலகும்
வம்புந்து கொன்றையந்தார் வளர்மதிசேர் கண்ணியன்காண்
அம்பொன்ருல் மூவெயிலும் அனலாடி ஆனஞ்சும்
செம்பொன் செய் மணிமாடத் திருமூலட் டானத்தெம் "

இத்தகைய நுட்டமான தமிழ்ச்செய்யுள் வடிவம் ஒன்றைப் பல்லவர்கால இலக்கிய உலகிற்குப் புதுவிருந்தாக அப்பரடிகள் படைத்துத் தந்துள்ளமையைத் தமிழ் இலக்கிய வரலாறு என்றும் மறவாது போற்றுதல் வேண்டும்.

2. 3: 'எழுத்துவருக்க மோனை' என்ற ஒன்றை முதற்கண் யாப்பிலே எடுத்தாளுகின்ருர் அப்பரடிகள். தமிழ் நெடுங் கணக்கில் உள்ள உயிரெழுத்தும் மெய்யெழுத்தும் ஆகிய முப்ப தெழுத்துக்களை ஒவ்வொரு பாட்டின் முதலெழுத்தாக அமைத்துப் பாடி மகிழ்கின்ருர் அடிகள். 9 சேக்கிழாரடிகளால், "தமிழ்மொழித் தலைவர்" என்றும், "கோதில் மொழிக் கொற்றவனர்" என்றும் சிறப்பிக்கப்பெற்ற அப்பர்க்கு, இறைவழிபாட்டின்போதும் தமிழ் மொழியின் அமைப்பும் அழகும் மறக்கவில்லை என்பதையே இது காட்டுகின்றது.

" எழுத்தெனப் படுப
அகர முதல் னகர விறுவாய்
முப்பஃதென்ப ;
சார்ந்துவரல் மரபின் மூன்றலங் கடையே "

என்ற தொல்காப்பியர் நூற்பாவின்படி 10 அகரமுதல் னகர விறுவாய் முப்பதெழுத்துக்களை முதலாக உடைய பாட்டுக்களைச் 'சித்தத்தொகைக் குறுந்தொகை' என்ற தலைப்பிற் காண்கின்ருேம்.

---

8. அப்பர் தேவாரம் - தேவாரப்பதிகங்கள் 2385-ம் பாட்டு
9. பதிகம் 210; 2026 - 2055 பாட்டுக்கள்
10. தொல்காப்பியம் (மூலம்) - நூன்மரபு - 1

இந்தப்பதிகத்தின் முதற்பாடல் "சிந்திப்பார்" (2026) எனத் தொடங்குகின்றது. இரண்டாவது பாடல் "அண்டம்" (2027) எனத்தொடங்குகின்றது; "அவ்வத்தன்மையர்" என் பதனை 'ஔவதன்மை' (2038) என்று வரிவடிவமாக அடிகள் கொண்டிருக்க வேண்டும்; அவ்வாறே "அக்கும் ஆமையும்" (2039) என்றபாடல், வரிசைப்படி "அஃகும்" ஆமையும் - என்ற தொடக்கமுறையாதல் இருக்கவேண்டும். 'வ' 'ற' - என்ற இரண்டெழுத்துக்களை முதலாக உடைய பாட்டுக்கள் மறைந்து விட்டன; இப்போதைய பதிப்புக்களில் இல்லை. இப்பதிகத்தின் இறுதியில் உள்ள "இலங்கைமன்னனை" (2055) என்றபாடல் வரிசைமுறைப்படி 'ல' முதலுக்கு அமைந்திருந்து. இராவணனை பற்றிய குறிப்புடைமையான் இடம் பெயர்க்கப்பட்டு இறுதிப் பாட்டாக ஏடெழுதுவோராற் கொள்ளப்பட்டிருக்கவேண்டும்; ஆகவே இது இப்போது பதிப்புக்களில் இறுதிப் பாடலாகக் காணப்படுகின்றது. இப்பதிகத்தின் முதலில் இப்போது காணப் பெறும் "சிந்திப்பார்" (2026) எனும் பாடல், பதிகப் பயன் கூறுவதுபோன்று அமைத்திருத்தலால் இப்பதிகத்தின் இறுதிப் பாடலாக இருந்திருக்கலாம் என்று கொள்ளவும் இடம் உள்ளது. சித்தத் திருக்குறுந்தொகை என்ற பெயருக்கேற்ப இதுவே இதன் முதற்பாடலாக இருக்கவேண்டும் என்று கூறவும் இயலாது. "பாவநாசமே" என்று முடியும் பாடலை இறுதியில் உடைய பதிகம் "பாவநாசத் திருப்பதிகம்" என்று பெயர் பெற்றுள்ளமை அப்பர் தேவாரத்திற் காணக்கிடப்பது.[11] அதுபோன்றே இந்தத் திருப்பதிகமும் பெயர்பெற்றிருக்கலாம் என்று கருதலாம்.

பதிகத்தின் உள்அமைப்பு எவ்வாறாயினும் இந்தப் பதிக யாப்பு ஒரு புதிய இலக்கிய மரபு என்றே கொள்ளலாம்.

2 4: ஒருமொழியில் வாய்மொழியிற் சிறந்த பகுதிகளும் இலக்கிய மதிப்புடையனவாகப் போற்றப்பெறுதல் உண்டு. மக்கள் தம் வாழ்நாளில் உணர்ந்து தெளிந்து அனுபவத்தின் பிழம்பாகத் திரட்டித்தரும் பழமொழிகள் இத்தகைய இலக்கிய மதிப்புடையவை. முன்றுறையரையர் என்ற பழந்தமிழ்ப் புலவர் இவ்வாறு தம் காலத்தும் அதற்குமுன்னரும் வழங்கிவந்த பழமொழிகள் நானூற்றினைத் தொகுத்தியற்றி விளக்கிய நூலே "பழமொழி நானூறு". அப்பரடிகள் காலத்து மக்கள் பேச்சு வழக்கில் கண்ட பழமொழிகள் அடிகளுடைய உள்ளத்தைக்

11 அப்பர் தேவாரம், தேவாரப்பதிகங்கள் பாட்டு 555 (பதிகம் 15)

கவர்ந்தன. 'வாய்மொழி இலக்கியம்' என்று கூறத்தக்க பொருட் பெருக்கமும் சொற் செறிவும் உடைய அவற்றைத் தாம் எடுத்தாண்டு மகிழ்ந்தார்; மக்கள் பேச்சுவழக்கும் அவற்று நுட்பமும் கற்றோரால் ஏத்தப்படுதல்வேண்டும் என்ற ஒருமரபைத் தம்முடைய கவிதைகளின் வழியே வகுத்துவிட்டார் என்று கூறலாம். கனியிருப்பக் காய் கவர்தல், முயல்விட்டுக் காக்கைபின் செலல், ஏதன்போர்க்கு ஆதனாய் அகப்படல், இருட்டறையில் மலடு கறந்து எய்த்தல், விளக்கிருக்க மின்மினித்தீக் காய்தல், பாழூரிற் பயிக்கம்புக்கு எய்த்தல், கரும்பிருக்க இரும்புகடித்து எய்த்தல் முதலிய பழமொழிகள் பல, அடிகளால் எடுத்தாளப் பெற்றுள்ளன. இவை அக்காலமக்கள் மனநிலையும், அறிவுக் கூர்மையும்பற்றி இனிதுணர்தற்குத் தக்க குறிப்புக்கள் என்று கூறுவது தவறாகாது. 12

எட்டுவகை வனப்புக்களுள் ஒன்றாக ஆசிரியர் தொல்காப்பியரால் உரைக்கப்பட்டது 'புலன்' என்ற இலக்கிய அமைப்பு கற்றோர்க்கும் மற்றோர்க்கும் எளிதிற் பொருள் புலப்படுமாறு தெரிந்த சொற்களால் இயற்றப்படும் செய்யுளில் புலன் என்னும் அழகு செறிந்து தோன்றும்.

"சேரிமொழியாற் செவ்விதின் கிளந்து
தேர்தல் வேண்டாது குறித்தது தோன்றிற்
புலன்என மொழிப புலன்உணர்ந் தோரே."

என்பது தொல்காப்பியர் நூற்பா. 13. "பாடி மாற்றங்கள் சேரிமொழி" என்பது பேராசிரியர் கருத்து. இலக்கியத்திலே இந்தப் 'புலன்' என்ற அழகைப் பொருத்திப் பாவலர்உலகிற்குப் புதுவழிகாட்டியவர் அடிகள் எனலாம். பொந்தை, களேபரம், பட்டி, பாடி, மொண்ணை, சரக்கு, ஏச்சு, நைஞ்சு, அஞ்சு, ஒண்ணு, நாலு, சிரிச்சு முதலிய பேச்சுமொழிச் சொற்களைக் கையாண்டு, மக்கள் பேச்சுநடைச்சொல்லும் பொருளும் இலக்கிய வாழ்வில் இடம் பெறல் வேண்டும் என்ற நெறி வகுத்தவர் அடிகள். பல்லவர் கால இலக்கியப் போக்கில் நிகழ்ந்த மொழியியல் மாற்றங்கள், நிலைகள் முதலியவற்றை ஆராய்ந்தறிந்திட இவை பெரிதும் துணைபுரிதலை அறிஞர் இனிது உணர்வர்.

---

12. பதிகம் - 5
13. தொல்காப்பியம் - செய்யுளியல் - 241

2. 5: அப்பரடிகள் காலம் பல்லவர் ஆட்சிக் காலத்தின் பொற்காலம் என்று மதிக்கத்தக்க ஏற்றம் உடையதாகும். எண்ணற்ற திருக்கோயில்கள் புதியனவாக எழுந்தன; பல திருப் பணிகள் பெற்றன. இவற்றைச் சென்று வழிபட்டுக் கைத் தொண்டு செய்யும் வழக்கம் உடைய அப்பரடிகள், ஒரு தலத்தி லிருந்து மற்றொரு தலத்திற்கு நடந்து செல்லும்போதும், ஆங்காங்குத் திருத்தொண்டுகள் செய்யும்போதும் பாடிய பாக் கள் 'குறுந்தொகை' என்ற தலைப்பில் காணப்பெறுகின்றன. 14. இக் குறுந்தொகை யாப்பு மிக எளிதான சந்த அமைப்புடன் கூடியதாய் இறைவனை முன்னிலைப்படுத்தி ஏத்துவதற்கும், மக்களை விளித்து உண்மை உணர்த்துவதற்கும் வாய்ப்பானதாம் உள்ளமை அறியத்தக்கது.

'ஒருமா கூவிளம கூவிளம் கூவிளம்' என்பது இதன் கட்டளையடி. நாற்சீர் நான்கடிகள்; முதற்சீர் அடிதோறும் தேமா அல்லது புளிமாவாக அமைந்திருக்கும். கருவிளம் அல்லது கூவிளம் நான்காம் சீராக அமைந்திருக்கும். இரண்டு மூன்றும் இடைச்சீர்கள் பெரும்பாலும் விளச்சீர்களாக இருக்கும். இந்தப் படைப்பு அடிகள் மேற்கொண்ட சீரிய இலக்கிய வடிவிற் பிறி தொன்றாகும்.

"அன்னம் பாலிக்கும் தில்லைச்சிற் றம்பலம்
பொன்னம் பாலிக்கும் மேலுமிப் பூமிசை
என்னம் பாலிக்கு மாறுகண் டின்புற
இன்னம் பாலிக்கு மோவிப் பிறவியே" 15

பிற்கால இலக்கணத்தார் 'கலிவிருத்தம்' என்றபெயரில் இந்த வடிவத்தைப் பெருவாரியாகப் பின்பற்றலாயினர். காப்பியங் களில் இவற்றைப் பெருங்கவிஞர் கையாண்டு சிறப்பிக்கலாயினர்.

2. 6: தலை முதலிய உறுப்புக்களை விளித்து அவற்றை இறைவன் திருத்தொண்டில் ஈடுபடும்படிச் செய்விக்கும் பாட்டுக் களைத் 'திருவங்கமாலை' என்ற தலைப்பில் அடிகள் பாடி யுள்ளனர் 16. இத்திருவங்கமாலை தோன்றிய பிறகு, இதனைப் பின்பற்றி இலக்கிய உலகம் போற்றிக்கொண்டது. "தலையே நீ வணங்காய்" என்று தொடங்கும் பதிகம் (9) தலை, கண், செவி மூக்கு, வாய், நெஞ்சு, கை ஆகிய உறுப்புக்களை விளித்து அரன் அடி போற்றுமாறு ஆற்றுப்படுத்துகின்றது.

---

14. அப்பர் தேவாரம், தேவாரப்பதிகங்கள் 1071 2085-பாட்டுக்கள்
15. அப்பர் தேவாரம் - 1071 - பாட்டு
16. அப்பர் தேவாரம் - பதிகம் 9

இவ்வாறு அப்பர்அடிகள் கண்ட இலக்கியமரபுகளைத் தொகுத்துக் கண்டால் பலவற்றைக் கூறலாகும். அடிகள்கண்ட இம்மரபுகள் அனைத்தும் இலக்கிய உலகம் கண்ட புதுமைகளாக அமைந்தன. தமிழும் வடமொழியும், கலந்த கலப்புக்காலம் பல்லவர்காலம். 17. பாலிமொழியும், வடமொழியும்கற்றவர் அப்பர் அடிகள்; இயல்பாகவே தமிழ்ப்புலமையும்நிரம்பப்பெற்றவர். தம்முடைய ஆழ்ந்த பக்தி உணர்வின் அடிப்படையில் அடிகள் பாடிய அருட்பாக்கள் இலக்கியப் புதுமை நெறிகளைக் கொண்டு எழுச்சி பெற்றதால் பல மரபுகள் அப்பாக்களினின்றும் தோன்றலாயின. பிற்காலத்தே, சோழர், பாண்டியர் காலத்தும் அதற்குப்பின்னும் வாழ்ந்த புலவர்கள் பலரும் இம்மரபுகளைத் தழுவி ஏற்று, மேற்கொள்ளலாயினர். சுருங்கக் கூறினல், பல்லவர் காலத்தே, (முதலாம் மகேந்திரவருமன், முதலாம் நரசிம்ம வருமன்) எழுந்த இப்பக்தி இலக்கியம் விளைத்த மரபுகளால் தமிழ் உலகம் பெற்ற பயன்கள் பல என்று கூறலாம்.

---

17. பல்லவர் அவைகளில் பாரவி, தண்டி முதலிய வடமொழிப் புலவர்கள் இடம்பெற்றிருந்தனர்; 'காவ்யா தர்சம்' முதலிய நூல்கள் வடமொழியில் எழுந்தன. முதலாம் மகேந்திர வருமனே 'மத்தவிலாசப்பிரகசனம்' என்ற வடமொழிநாடக நூல் ஆசிரியன். கிரந்த லிபியில் எழுந்த கல்வெட்டுக்களே இவர்கள்காலத்துத் தொடக்கக் காலத்திற் காணப்பட்டன. பல்லவர் விருதுப்பெயர்களிற் பெரும்பாலான வடமொழியால் அமைந்தனவே. தமிழ்மொழி இலக்கியங்களில் வடமொழிச் சொற்கள் பெரிதும் கலந்தது இப்பல்லவர் காலத்தேயே என்று கூறலாம்.

---

## படிப்பும் படியாமையும்

"படித்தவனுக்கும் படிக்காதவனுக்கும் உள்ள வேறுபாடு உயிருள்ளவனுக்கும் இறந்தவனுக்கும் உள்ள வேறுபாட்டைப் போன்றது என்பார் டாக்டர் ஜான்சன்.

படிக்காதவனுக்கும் படித்தவனுக்கும் உள்ள வேறுபாடு விலங்கிற்கும் மக்களுக்கும் உள்ள வேறுபாட்டைப் போன்றது என்பர் தெய்வப் புலவர் திருவள்ளுவர்.

"விலங்கொடு மக்க ளனையர் இலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்"

— "வேலன்"

# திருவருட்பயன் விளக்க உரை

தருமையாதீனப் புலவர், மகாவித்துவான்,
திரு. சி. அருணைவடிவேல் முதலியார்.

(மலர் 32. இதழ் 9. பக்கம் 461 இன் தொடர்ச்சி)

ஆருவது குறள்,

" உள்ளும் புறம்பும் ஒருதன்மைக் காட்சியருக்
கெள்ளும் திறமேது மில் "

எனவரும்.

இதன் பொருள் :- உள்ளும் புறம்பும் ஒரு தன்மைக் காட்சியருக்கு- அகத்தும் புறத்தும் ஒரு தன்மையேயாய உணர்வை உடைய அணைந்தோர்க்கு; எள்ளும் திறம் ஏதும்இல் - 'குற்றம்' என்று இகழப்படும் கூற்றினை உடைய செயல் ஒன்றேனும் உண்டாதல் இல்லை.

விளக்க உரை :- அக நோக்கினை முன்னர்க் கூறினமையால், புற நோக்கும் அக நோக்கின் தன்மைத்தாதல் பெறப் பட்டது. அக நோக்கிற்குப் புலம் மெய்ப்பொருளே என்பது வெளி. அகநோக்கு அடையப்பெற்றார்ஒரோவழிப்புறநோக்குடையராயபொழுதும் தன்மை திரியார். அதற்குக் காரணம், அகநோக்கிற்குப் புலனாய் நிற்கும் மெய்ப்பொருள் அகம், புறம் என்னும் வேறுபாடின்றி யாண்டும் நீக்கமற நிறைந்து நிற்றலாம். ஆகவே, கனியிருப்பக் காய் கவர்வாரின்மைபோல, மெய்ப் பொருளை அணைந்தோர், புறத்துப் புலனும்பொருளிலும் மெய்ப்பொருள் உளதாக அதனை விடுத்துப் பொய்ப் பொருளைப் பற்றார் என்பது நன்குணர்ந்து கொள்க. இதனையே,

" எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு " ‡

என்றார் திருவள்ளுவ நாயனார். " ஒரு தன்மைக்காட்சியர்க்கு " என்றதனால், அத்தன்மையராதலையும் அனுவாத முகத்தால் இதனானே கொள்க.

‡ குறள் - 355.

'குற்றம்' என்று இகழப்படும் கூற்றினை உடையவை, பொய்ப் பொருள் பற்றி வரும் காம வெகுளி மயக்கங்கள். பொய்ப் பொருள் தோன்றுதொழியவே, அவைபற்றி வரும் குற்றங்களும் இலவாயின. ஆகவே, அக்குற்றங்களால் வரும் வினையும், அவ் வினையால் வரும் பிறப்பும் இல்லையாதல், தானே பெறப்பட்டது.

"காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்
நாமம் கெடக்கெடும் நோய்" †

என்பதும் இக்கருத்தே பற்றி வந்தது.

சிவனை அணைந்தார்க்கு உணர்வு புறத்துச் செல்லுதல் ஊழ் காரணமாகவாம். அவ்வாறு செல்லினும் அவர் தம் இயல்பில் திரியார் என்க.

இதனால், அணைந்தோர்க்கு ஊழ் உடலளவாய் நிகழ்வ தல்லது, உணர்வினைத் திரிக்கமாட்டாமை, ஏதுவுடன் கூறப் பட்டது.

ஏழாவது குறள்,

"உறுந்தொழிற்குத் தக்க பயனுலகம்; தத்தம்
வறுந்தொழிலுக்கு வாய்மை பயன்"

எனவரும்.

இதன் பொருள் :- உறும் தொழிற்குத் தக்க பயன் உலகம் - உலகர் தாம் முனைந்து பொருந்திப் பற்றோடு செய்யும் தொழில் களுக்கு ஏற்ற பயன் உலகமாகும். தம் தம் வறுந் தொழிற்கு வாய்மை பயன் – அணைந்தோர் தாம் முனைந்து செய்யாது அவரவரும் தம்மைத் திருவருள் செலுத்திய வழியே சென்று பற்றின்றிச் செய்யும் தொழில்களுக்குப் பயன் மெய்ப்பொரு ளாகிய சிவனேயாவன்.

விளக்க உரை :- "உறுந் தொழில், வறுந்தொழில்" என்ற உடப்பொடு புணர்த்தலால், உலகரும், அணைந்தோரும் தாம் தாம் தொழில் செய்யுமாறு இவை என்பது குறிக்கப்பட்டது. "தக்க பயன்" என்றது, காரண காரிய இயைபினால் அவை மாறி நிகழாமையை வலியுறுத்தியவாறு. உலகம் பயனாதல், இன்பமும், துன்பமும் மாறி மாறி வரச் செய்யுமாற்றானும், வாய்மை பயனாதல், என்றும் உள்ளதாய வரம்பி லின்பத்தை வழங்குமாற்றானுமாம். அணைந்தோரது தொழிற்கு வாய்மையே பயனாதல் இனிது விளங்குதற்பொருட்டு, உலகரது தொழிலின் பயனையும் உடன் வைத்துக் கூறினர்.

---

† குறள் - 360.

இதனால், அணைந்தோர், புறத்தே உலகர்போலவே உண்டும், பூசியும், உடுத்தும், பிறவற்றைச் செய்தும் ஒழுகினராயினும், அவர்க்கு உலகம் நுகர்ச்சிப் பொருளாகாது, சிவமே நுகர்ச்சிப் பொருளாதல் கூறப்பட்டது. இதனானே வறுந் தொழில் செய்யமாட்டாது உறுந்தொழிலே செய்யும் உலகரது செயல் தவநெறியாகவே நிகழினும் அவை பிறப்பினை நீக்க மாட்டா என்பதும் போதரும். இதனை,

“ நாடுகளிற் புக்குழன்றும், காடுகளிற் சரித்தும்
நாகமுழை புக்கிருந்தும், தாகமுதல் தவிர்ந்தும்,
நீடுபல காலங்கள் நித்தரா யிருந்தும்
நின்மலஞா னத்தையில்லார் நிகழ்ந்திடுவர் பிறப்பில்;
ஏடுதரு மலர்க்குழலார் முலைத்தலைக்கே யிடைக்கே
எறிவிழியின் படுகடைக்கே கிடந்தும் இறைஞானம்
கூடுமவர் கூடரிய வீடுங் கூடிக்
குஞ்சித்த சேவடியும் கும்பிட்டே யிருப்பர் ”

என்னும் சிவஞான சித்திச் செய்யுளால் இனிதுணர்க.

எட்டாவது குறள்,

‘ ஏன்ற வினைஉடலோ டேகும்; இடை யேறும்வினை
தோன்றில் அருளே சுடும் “

எனவரும்.

இதன்பொருள் :- ஏன்ற வினை உடலோடு ஏகும் – எடுத்த இப் பிறப்பில் நுகரத் தக்கனவாகப் பழவினையினின்றும் முகந்து கொண்ட வினைகள், இவ்வுடம்பு நீங்குங் காலத்து நுகரப் பட்டு முடிந்தொழியும்; இடை ஏறும் வினை தோன்றில் – அவ் வினையை நுகருமிடத்து இடையே தோன்றி வளர்வதாய புது வினை தோன்றுமாயின் அதனை; அருளே சுடும் - எஞ்சிக் கிடந்த பழவினையை முன்பு சுட்டெரித்த அந்த அருள்தானே சுட்டெரிக்கும்.

விளக்க உரை :- பிறவிதோறும் செய்யப்படும் வினைகளுள் உடனே பயன் தருவன போக, எஞ்சிய வினைகள் தத்தமக்குரிய காலத்தே பயனைய் வரும். அதுகாறும் ஈண்டிக் கிடக்கும் அவை கட்கு, ‘சஞ்சிதம்’ என்பது பெயர். அவற்றுள் பக்குவப்பட்டவற்றை எடுத்துக்கொண்டு ஒரு பிறப்புத் தோன்றும். அப் பிறப்பில் அவ்வினைகள் வந்து பயனை ஊட்டுவிக்கும். அக் காலத்து அவை ‘பிராரத்தம்’ எனப் பெயர்பெறும். அந்தப் பிராரத்தத்தை நுகரும்பொழுது, யான், எனது என்னும் முனைப்

புடன் இன்பத்தில் விருப்பும், துன்பத்தில் வெறுப்பும் கொண்டன்றி நுகர்தல் இயலாது. அதனுல் அந்த முனைப்போடு கூடிய விருப்பு வெறுப்புக்களால் நல்லனவும், தீயனவும் ஆகிய புது வினைகள் தோன்றும். அப்புதுவினைகள், 'ஆகாமியம்' எனப் பெயர் பெறும். பின்பு ஆகாமியமே சஞ்சிதமாயும், பிராரத்த மாயும் வரும். இவ்வாறு நிகழ்வது வினைச்சூழல். இச்சூழலில் ஆன்மா அகப்பட்டு நிற்றற்குக் காரணம், அஞ்ஞானத்தின்வழி 'யான்' என்றும், 'எனது' என்றும் செருக்கி நிற்றலே, அச்செருக்கினை ஆன்மா பக்குவம் பெறுதற்குமுன் இறைவனுலும் நீக்குதல் இயலாது. அதனுல் ஆன்மா பக்குவம் எய்தும் நிலையை அவன் இடையருது நோக்கி நிற்கின்ருன். பக்குவம் எய்தியவுடன் வெளிப்பட்டு அஞ்ஞானத்தைப் போக்கி, மெய்ஞ்ஞானத்தை அருளுகின்ருன். அதுவே, 'நிருவாண தீட்சை' எனப்படுகின்றது. எனவே, அஞ்ஞானத்தைப் போக்கும்வழி அதன் செயல் நிகழ்ச்சிக்குச் சார்பாயுள்ள சஞ்சிதத்தை அழித்தாலல்லது அவ்வஞ்ஞானம் நீங்காது. அஞ்ஞானம் நீங்காதபொழுது, மெய்ஞ்ஞானம் விளங்காது.

ஆகவே, மெய்ஞ்ஞானத்தைத் தர வருகின்ற திருவருள் முன்னர்ச் சஞ்சிதத்தைச் சுட்டழித்தே, பின்னர் மெய்ஞ்ஞானத்தை வழங்கும். அதனுல், பின்னர் ஆகாமிய வினை தோன்றுமாயின், அது வளர்ந்து சஞ்சிதமாய் முற்ருதவாறு அந்த அருளே அதனை விரைய அழிக்கும் என்றற்கு, "அருளே சுடும்" என்ருர். எனவே, "அருளே சுடும்" என்பதற்கு, 'அவ்வருளே சுடும்' எனப் பண்டறி சுட்டு வருவித்துரைத்தல் கருத்தாயிற்று. இதனுள் "ஏன்ற வினை" என்றது பிராரத்தமும், "இடை ஏறும் வினை" என்றது ஆகாமியமும் ஆதல் அறிந்துகொள்க.

'திருவருட்கு உரியராயினரை அவர்தம் பழவினை வந்து பற்ற மாட்டாமையானும், அவற்றிற்கு வேறு சார்பின்மையானும் அவை தாமே கெட்டொழியும்' என்பாரும் உளர்* பழ வினை உள்ள துணையும் திருவருட்கு உரியராதல் கூடாமை மேற் கூறிய வாற்ருன் விளங்கிக் கிடத்தலின், 'திருவருட்கு உரியராயின பின்பே அவை அழியும்' என்றல் பொருந்தாமை அறிக.

"தோன்றில்" என்றதனுல், 'அணைந்தோர்க்குப் பயிற்சி வயத்தால் எப்பொழுதாயினும் ஒருகால் தன் முனைப்பும், அது வழியாக விருப்பு வெறுப்பும், அவை வழியாக ஆகாமியமும் தோன்றுதலல்லது, நம்மனோர்க்குப்போல அவை ஒழிவின்றித் தோன்ரு' என்பது பெறப்பட்டது. "ஏறும்வினை" என்றதில் மகரக் குறுக்கம் அலகு பெருது நின்றது.

---

* குறள் - 359 உரை, பரிமேலழகர்.

இதனால், அணைந்தோர்க்குப் பிராரத்தமும், ஆகாமியமும் நீங்குமாறு கூறி, சஞ்சிதம் இன்மையும் நினைப்பிக்கப்பட்டது.

ஒன்பதாவது குறள்,

" மும்மை தரும்வினைகள் மூளாவாம் ; மூதறிவார்க்
கம்மையு மிம்மையே யாம் "

எனவரும்.

இதன் பொருள் :- மும்மை தரும் வினைகள் மூதறிவார்க்கு மூளா- பிறர்க்கெல்லாம் இம்மை, அம்மை, மறுமை என்னும் மூவகைப் பயனையும் தருவனவாய் வளர்கின்ற வினைகள், உயர்ந்த ஞானத்தை உடையவர்க்கு வளரமாட்டா. அதனால்; அம்மையும் இம்மையே ஆம் - அவர்கட்கு உடம்பு நீங்கியபின் உளவாகின்ற வீட்டு நிலை, உடம்பு உள்ளபொழுதே உளதாம். இதுவே சிவன் முத்தி நிலை.

விளக்க உரை:- 'இம்மை, அம்மை, மறுமை' எனக் கூறும் மும்மையுள் அம்மை துறக்க நிரயங்களிற் செல்லும் நிலையையும், மறுமை மீள இந்நிலத்திற் பிறக்கும் நிலையையும் குறிக்கும் ஆயினும் இப்பாட்டுள், 'அம்மை' என்றது உடம்பு நீங்கிய நிலையை; இதுவே பரமுத்திநிலை. "மும்மை தரும் வினைகள் மூளா" என்றது ஏதுக் கூறியதாதலின், அவ்விடத்து, 'அதனால்' என்னும் சொல்லெச்சம் வருவிக்கப்பட்டது.

அம்மையில் உடம்பு இன்மையால் வினைகள் வந்து சிவானந்த நுகர்ச்சியைத் தடை செய்ய மாட்டா. உடம்பு உள்ளதாயினும் அதன்கண் பற்று இன்மையால் வினைகள் மூளாமையின், இம்மையிலும் சிவஞானியர்க்குச் சிவானந்த நுகர்ச்சிக்குத் தடையில்லை. அதனால், " அம்மையும் இம்மையேயாம் " என்றார்.

இனி, மேற்கூறியவாற்றால் மூதறிவார்க்கும் பயற்சிவயத்தால் ஒரோவொருகால் வினை மூட்சிக்கு வாயில் உண்டாகுமாயின், அது நீங்குதற் பொருட்டே திருக்கோயில் வழிபாடு, சிவனடியார் மாட்டு இணக்கம், திருவைந்தெழுத்து எண்ணம் என்பவற்றை அவர் மேற்கொள்வர். இதனை ஞானசம்பந்தர், நாவுக்கரசர் முதலிய அருளாளரது வரலாற்றான் அறிக.

இதனால், அணைந்தோர்க்கு இம்மையிலே சிவானந்த விளைவு இடையறாமை கூறப்பட்டது.

பத்தாவது குறள்,

" கள்ளத் தலைவர் துயர்கருதித் தங்கருணை
வெள்ளத் தலைவர் மிக "

எனவரும்.

இதன் பொருள் :- கள்ளத் தலைவர் துயர் கருதி - சிவனது தலைமையைத் தமதாக்கிக் கொள்கின்ற மடவோர், அம்மடமை காரணமாகப் படும் துன்பத்தை எண்ணி; தம் கருணை வெள்ளத்து மிக அலைவர் - மூதறிவார் தமது இரக்க மிகுதியால் மிகவும் பரிதலைச் செய்வர்.

விளக்க உரை :- யாதொரு செயற்கும் தம்மையே தலைவராகக் கொள்ளுதலே 'யான், எனது' என்னும் செருக்கு. 'அதனல் விளைவதே வினை' என்பது மேலே காட்டப்பட்டது. வினை விளைப்பது துன்பமே என்பது வெளிப்படை. எனவே, துன்பம் நீங்குதற்கு வாயில் சிவனை வணங்கி ஒழுகுதலேயாம்.

"அறிவினுன் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்
தன்னேய்போற் போற்ருக் கடை "‡

என்றவாறு, உலகர் தமது அஞ்ஞானத்தாற் படுந் துன்பத்தைக் கண்டவழி மூதறிவார்க்கு இரக்கம் மிகுதலும், அவ்விரக்க மிகுதியால், உலகர் தாம் கேட்க ஒருப்பட்டிலராயினும் உண்மையை அறிவுறுத்த முற்படுதலும் அவர்க்கு இயல்பின் உளவாம் என்க. இதனை,

"நம்பொருள்நம் மக்கள்என்று நச்சியிச்சை செய்துநீர்
அம்பரம் அடைந்துசால அல்லல்உய்ப்ப தன்முனம்
உம்பர்நாதன் உத்தமன் ஒளிமிகுத்த செஞ்சடை
நம்பன்மேவும் நன்னகர் நலங்கொள்காழி சேர்மினே "†(1)

"விடுத்த தூதுவர் வந்து வினைக்குழிப்
படுத்த போது பயனிலை பாவிகாள் !
அடுத்த கின்னரங் கேட்கும்வாட் போக்கிபால்
எடுத்தும் ஏத்தியும் இன்புறு மின்களே "*(2)

என்றற்போலும் திருமொழிகளான் அறிக.

இதனல், அணைந்தோர், தம்மால் அணையப்பட்ட அச் சிவன்போலவே பேரருள் உடையராய் நின்று, உலகிற்கு உய்தி தருதல் கூறப்பட்டது.

திருவருட்பயன் விளக்க உரை
முற்றிற்று.

---

‡ குறள் – 315.
†(1)திருமுறை – 2.97.1. (2) *திருமுறை – 5.86.2.

# சிவபோகசார வெண்பாப் பொருள் விளக்கம்

காஞ்சிபுரம், தொண்டைமண்டலாதீன குருமகாசந்நிதானம்
**சீலத்திரு. ஞானப்பிரகாசதேசிக பரமாசாரிய சுவாமிகள்**

சைவாதீனங்களுள் திருவாவடுதுறை, தருமபுரம் இரண்ட னுள்ளும் வீற்றிருந்தருளிய குருமகாசந்நிதானங்கள் அருளிய சிவரகசிய கிரந்தங்கள் பல இன்றும் நின்று நிலவுகின்றன. இந் நிலை சைவர் செய்த சிவபுண்ணியப்பயனுகும். அவற்றுள், தருமைக் குருமுதல்வர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருளிய சிவபோக சாரத்தின் ஒரு வெண்பாப்பொருள், அத் தருமைத் திருமடத்து முனிவருள் ஒருவராய்ப் பண்டு விளங்கிய சிவானந்தமுனிவர் அருளிய சிவானந்தபோத சாரத்தின் உரையின் முதலினும் முடிவினும் பிரமாணமாகக் காட்டப்பட்டது கொண்டு இவ் விளக்கம் எழுதப்படுகின்றது. ஒன்பது யாண்டின் முன்னர் உணர்ந்த இதனை வெளியிடத் திருவருள் இப்போதுதான் துணையாகின்றது. அவ்வுரையும் அதன் மூலமும் (ஓர் அகவலும்) 2—10—30 இல் (சீகாழி வித்துவான் ப. அ. முத்துத்தாண்டவ ராயப்பிள்ளை எழுதிய முகவுரையோடு) தருமையாதீனம் வெளி யிட்டவை.

21—11—54 இல் இரண்டாவது வெளியீடாகத் திருக் கயிலைக் குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் திருவுள்ளப்பாங்கின் வண்ணம் 'சாத்திரங்களும் தோத்திரங்களும்' என்றபெயருள்ள தொகுப்பினுள் ஒன்ருய் இரண்டாவது ஞானப்பனுவலாய் எம் ஆராய்ச்சி முன்னுரையோடு அத்திருமடத்தின் ஞானதானம் எனச் சைவருலகு பெற்றது. அம்முனிவரொடு கற்றவருள் தாயுமானவர் ஒருவர் என்றதால், அவர் காலம் முந்நூற்ருண்டின் முற்பட்டது. அதன் உரை, சைவசிகாமணியாகத் திகழ்ந்து சிறந்த அருணூல்களையும் வெளியிட்ட பேருதவியாளர் அநவரத விநாயகம் பிள்ளை வீட்டிலிருந்து கிடைத்த தென்று அம்முன்னு ரையில் அறியலாயிற்று. சிவபோகசாரம் நூற்றுக்கு மேற்பட்ட திருவெண்பாவை யுடையது. அவற்றுள் இத் திருவெண்பா 21 ஆவது. இதனைச் சிவானந்தபோதசார வுரைமுதலிலே,

" சிவபோக சாரத்தின் வரும் உலகப்பழிப்பும் சிவபோகத்துள் அடங்குமோ?" என்ற வினவைத்தோற்றி, " சிவபோகம் புசித்த சாத்தியாளர் பரமேபார்த்திருப்பர் அன்றிப் பதார்த்தங்களைப் பாரார் ஆகையால், உலகப்பழிப்பும் சிவபோகத்துள்ளே அடங்கும் என்க". என்று விடையிறுத்து,

## இதற்குப் பிரமாணம்,

நனவாதி யந்தத்தின் நாடுசுகந் தன்னைக்
கனவாதி யந்தத்திற் கண்டு — நனவாதி
தோற்றும்போ தந்தச் சுகரூபங் கண்டவர்கள்
மாற்றிடுவர் என்றும் மலம்

எனக் காட்டிற்று. முடிவிலே,

உலகத்தைப் பைம்மறியப் பார்க்கிற் பரையாதற்கும், அப்பரையைப் பைம்மறியாகப் பார்க்கிற் சிவதரிசனம் ஆதற்கும் பிரமாணம் :-

" பைம்மறியாப் பார்க்கிற் பரையாகும் அப்பரையைப் பைம்மறியாப் பார்க்கிற் பரம்" (சிற்றம்பலநாடிகள் வெண்பா. 55.) எனவும்,

" நனவாதி யந்தத்தினுடுசுகம்......கண்டவர்கள் மாற்றிடுவர் என்றும் மலம்" எனவும் வருவது காண்க என்று குறித்தது.

சிவானந்த போதசாரத் துரையில், முப்பதவதரத்துள், பதியைச்சார்ந்தவற்றிற் கூறும் 1. சுகம் 2. ஆநந்தம் என்னும் இரண்டு அருளும் பொருந்துஞ் சமாதிநிலை தவறினும் விதிப்படி அஞ்செழுத்தை யுச்சரித்துப் பசுவைச்சார்ந்த அவதரத்திற் கூறும் 1. ஞானம் 2. பரை என்னும் இரண்டனுள், (1) ஞானம் என்ற விளக்கொளியைத் தூண்டிக்கொண்டு அதனலே பேரொளியாகிய (2) பரை நிறைவான் அவ்வுலகத்தைக்காண்பது பைம்மறியாக மறித்துக்காணுங் காட்சியாம்.

(1) சுகம் (2) ஆநந்தம் (3) ஞானம் (4) பரை என அருள் நான்கு. அவற்றுள், உலகத்தைப் பைம்மறியாக மறித்துக் காணுங் காட்சி பரை தரிசனம் ஆகும். ஆதலின், சிவானந்த போதசாரத்தின் ஈற்றயலடி முடிவிலே 'அவ்வருள்' எனச் சுட்டினர் ஆசிரியர்.

" மெய்யுறு சமாதியை விடுத்தும் அவ்வருளினுள்
வையகம் காண்பது மறித்துக் காட்சியே "

என்னும் ஈரடியும் அவ்வருணூலகவலின் முடிவடியாவன.

இக் குறிப்புக்களை உள்ளத்திற் கொண்டு, அச்சிவபோகசார வெண்பாப் பொருளை உணர்தல், சைவசித்தாந்திகள் கடனாகும். ஆகலின், அவ்வுணர்வு இவ்விளக்கத்தால் உண்டாயின், அதுவே இக் கட்டுரையின் பயன் எனலாம். திருவருள் துணையால் இவ்விளக்கம் செவ்விளக்கம் ஆருக.

பைம்மறித்துப் பார்த்தல் - பையை உட்புறமாக்கி (புறத்தை உள்ளாக்கி) ப் பார்த்தல்; இஃது உவமை. உலகை (ப்புறத்தை) ப் பரையாக்கி (வெளியாக்கி) ப் பார்த்தல், பரையைப் பரமாக்கிப் பார்த்தல். உவமையில் நிகழ்வது பிறவினை. பொருளில் அவ்வாறு அன்று. ஆக்குதலாகப் பிறவினையாற் கூறியது விளங்கும்பொருட்டு. ஞானத்தால் உலகைப் பைம்மறியாப் பார்த்தலும் பரையைப் பைம்மறியாய் பார்த்தலும் தன்வினையே. உலகமெல்லாம் பரையினுள் அடங்குதலும் பரை தன்னுள் உலகை அடக்கிக்கொண்டிருத்தலும் செயற்கையன்று. பரை பரத்தின் றன்னுரு(சொரூபம்) ஆகலின், பரையைப் பைம்மறியாப் பார்த்தலும் இயற்கையே. அதனல், எல்லாம் தன்வினையாற் கூறப்படுதலே இயல்புணர்த்தலாகும். நாலடியாரில் பலரும் அறிந்தசெயல் பைம்மறியாப்பார்த்தல்.

அவத்தை - நிலை. அது கேவலாவத்தை, சகலாவத்தை, சுத்தாவத்தை என முத்திறப்படும். அவையும் காரணவத்தை என்றும் காரியாவத்தை என்றும் இருதிறப்படும். காரண கேவலம், காரணசகலம், காரணசுத்தம் என்பன ஒவ்வொன்றே. காரியாவத்தை பெத்தத்தில் நிகழ்தல், முத்தியில் நிகழ்தல் ஆக இருதிறப்படும். ஒவ்வொன்றுள்ளும் பதினைந்துள்ளன. அவை :-

| | பெயர் | கேவலம் | சகலம் | சுத்தம் | |
|---|---|---|---|---|---|
| 1 | சாக்கிரம் | 1 | 1 | 1 | பெத்தத்தில் 15. |
| 2 | சொப்பனம் | 2 | 2 | 2 | முத்தியில் 15. |
| 3 | சுழுத்தி | 3 | 3 | 3 | |
| 4 | துரியம் | 4 | 4 | 4 | 30 |
| 5 | துரியாதீதம் | 5 | 5 | 5 | |

பெத்தத்தில் நிகழும் அவத்தைகளை விட்டு முத்தியில் நிகழும் அவத்தைகளை மட்டும் இங்கு நோக்குதல் வேண்டும். கேவலத்தின் ஒடுக்கம் முடிபு, சகலத்தின் ஒடுக்கம் முடிபு இரண்டை

யும் அறிந்து கொள்ளலும் இன்றியமையாததாகும். நற்றவத்தோர் சகலம் கேவலம் சுத்தம் என்ற முறையில் உறுவர். மக்கள் எல்லாரும் சகலாவத்தையின் நீங்குவதற்கும் சுத்தாவத்தையை அடைவதற்கும் இடையிற் கேவலாவத்தை உருதொழிதல் இயலாது சகலாவத்தை முடிவும் சுத்தாவத்தைத் தொடக்கமும், கேவலாவத்தையை நடுவிற்கொள்ளாது நிகழா. கேவலாவத்தைத் தொடக்கத்தால்தான் சகலாவத்தையின் முடிவு உணரப்படும் அவ்வாறே கேவலாவத்தையின் முடிவும் சுத்தாவத்தையின் தொடக்கத்தால்தான் உணரப்படும். இதனைத் திருவைந்தெழுத்தின் வைத்துக்காட்டுதும்.

சிவாய நம

| சி | வா | ய | ந | ம |
|---|---|---|---|---|
| பொருள்<br>சிவம் | அருள்<br>சத்தி | தெருள்<br>உயிர் | மருள்<br>திரோதை<br>மாயை<br>கன்மம் | இருள்<br>ஆணவம்<br>விளைவே! |

1. யகாரத்தின் மகாரச்சார்பு கேவலாவத்தை.
2. யகாரத்தின் நகாரச்சார்பு சகலநிலை.
3. யகார வகாரச்சார்பு சுத்தநிலை.

உடலெடுத்த உயிர் உடலின் நீங்கல் சகலாவத்தை நீக்கம். அப்போதுதானே நிகழ்வது கேவலநிலை. அக்கேவலாவத்தை அருளால் நீங்குங்கால் அவ்வருட்சார்பு இயல்பின் உறும். அதுவே சுத்தாவத்தை. அச் சுத்தாவத்தை யநுபவம் மேன்மேல் உயர்ந்து நிகழுங்கால்,வெவ்வேறு நிலைமையால் விளங்கும். உபதேச வாயிலான் அறியற்பாலன அவை. தகுதியுடையோர் நேரிற் கேட்டறிய விழையின் உபதேசிப்பேம். சித்தாந்தசாரம் (24—25) இவற்றுள் ஒன்றனைத் தெளியவைக்கும். அது 'சாத்திரங்களும் தோத்திரங்களும்' என்ற தருமையாதீன வெளியீட்டில் நான்காவது சாத்திரமாக உளது. அதில் அதனை நோக்கி அறிக.

சுத்தாவத்தை

| | | | | |
|---|---|---|---|---|
| 1. நனவு<br>சாக்கிரம் | 2. கனவு<br>சொப்பனம் | 3. உறக்கம்<br>சுழுத்தி | 4. பேருறக்கம்<br>துரியம் | 5. உயிர்ப்படக்கம்<br>துரியாதீதம் |

எனப்படும் ஐந்திறமும் ஏனை இருதிறத்திலுள்ளன போலச் சுத்தாவத்தையுள்ளும் உள. துரியம் என்னும் வடசொல் நான்கு என்னும் எண்ணுப்பொருளில் ஆளப்படுதலும் உண்டு. பேருறக்கம் என்பது அதன் மொழிபெயர்ப்பு அன்று. பரியாயப் பெயராயினும் தமிழும் வடசொல்லும் ஆகும் வேறுபாடுடையன. 1. மாயாமல நீக்கத்தின்கண் யகாரம் தற்போதம் அருதநிலை, தானே முதல் என்னும் நிலை 2. அம் முதன்மையின் நீங்கி அருளே முதல் என்னும் நிலை. 3. அருட்செயலை யானும் செய்வேன் என்று எண்ணிப் பின் நீங்கும்நிலை. 4. யகாரம் வகாரமாய்ப்போனநிலை. 5. சிகாரமாய் நிற்கும் நிலை. இதுவே பெருநிலை; சிவபோகநிலை; முன்னைய நான்கும் பிறவியை அறுக்கும் நிலையின அல்ல. இவ்வுண்மையை இங்கு விரித்துரைத்தல் இயலாது. அது தனியாக விரித்தெழுதற்பாலது. தசகாரியத்துள் ஒன்பதும் முன்நான்கனுள் அடங்கும். பத்தாவது (சிவபோகம்) ஒன்றே துரியாதீதநிலை. துரியம் - அருணிலை. துரியாதீதம் - பொருணிலை (பேரின்பநிலை).

நனவை முதல் (ஆதி) ஆகக்கொண்டு நோக்கின், துரியாதீதம் முடிவு (அந்தம்) ஆகும். நின்மலாவத்தை ஐந்தனுள் முதல் (ஆதி) ஆவது சுத்தசாக்கிரம். முடிவு (அந்தம்) ஆவது சுத்த துரியாதீதம். முற்குறித்த பேரின்பநிலை அத்துரியா தீதத்தில் உள்ளது. அதனை அங்கேதான் நாடல் வேண்டும். அவண் வேண்டியதால், அவ்விடத்தை நனவாதியந்தம் என்றும், அவ்விடத்து நாடும் பேரின்பத்தை நாடு சுகம் என்றும் குறித்தார். அக்குறிப்பே 'நனவாதியந்தத்தினடு சுகம்' எனப்பட்டதாகும்.

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| நனவாதி | | | | அந்தம் |
| நனவு | கனவு | சுழுத்தி | துரியம் | அதீதம் |
| 5 | 4 | 3 | 2 | 1 |

என்ற ஐந்தனுள் இரண்டாவதாகிய கனவை ஆதியாகக் கொண்டு நோக்குமிடத்து, அதன்முன் உள்ள நனவு அந்தம் ஆகும்.

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| கனவு | சுழுத்தி | துரியம் | துரியாதீதம் | நனவு |

எனவரும். வரினும் இப்படிக் கொள்ளும் நிலை இல்லை. மேலாலவத்தையும் கனவுக்குப்பின் நனவு ஆகலின் கனவு ஆதி, நனவு

அந்தம் ஆகும். நனவாதியந்தம் போன்று கனவாதியந்தத்தைக் கொள்வது பேதைமையின்பாற்படும். நாலவத்தைமட்டும் அதீதத்தினின்று நனவுக்குப் போதரும் முறைமையில், கனவை ஆதியாகவைத்து நனவை அந்தமாக கொள்ளல் வேண்டும். ஏன் இப்படி எண்ணினர் எனின், நனவாதி கனவாதி என்னும் எதுகை நயம் கிடைத்தமையால். மற்றொரு காரணமும் உண்டு. அதீதத்தைத் துரியத்திலிருந்து அடைதலே எளிது. துரியநிலை மெய்யுணர்ந்தோர்க்குச் சாக்கிரமாந்தன்மையது. அதனைத்,

துரியங் கடந்த இத் தொண்டர்க்குச் சாக்கிரம்
துரியமாய் நின்றதென் றுந்தீபற
துறந்தார் அவர்கள்என் றுந்தீபற

என்றதாலறியலாம். இங்குப் பரமாசாரியர் உபதேசித்தருளத் திருவுளம்கொண்டது துரியம் சாக்கிரம் ஆகும் நிலையையன்று; சாக்கிரத்தில் அதீதம் பெறும் நிலையையே. அதைத்தான் 'சாக்கிராதீதம்' என அருணூல்கள் கூறுகின்றன.

"பசுகரணங்கள் சிவகரணமாகத் துன்னிய சாக்கிரமதனில் துரியாதீதம் தோன்றமுயல், சிவானுபவம் சுவானுபூதிகம் ஆம்," என்றும்,

"சாக்கிரத்தே அதீதத்தைப் புரிந்தவர்கள் உலகில் சருவ சங்கநிவிர்த்தி வந்த தபோதனர்கள். இவர்கள் பாக்கியத்தைப் பகர்வது என்? இம்மையிலே உயிரின்பற்றறுத்துப் பரத்தையடைபராவுசிவர் என்றும் சிவஞானசித்தியாரிலே வரும் அருண்மொழிகளை அனைவரும் அறிவர். சிவப்பிரகாசத்திலே,

" நீக்கம்இல் அதீதம் ஆசு நிறைந்தகேவலமாம் நீர்மை
சாக்கிரம் கலாதி சேர்ந்த சகலமாந் தன்மை யாகும்,
ஊக்கம்இல் இரண்டும் கூடா தொழிய ஓர் நிலையில் நீடும்
சாக்கிரா தீதம் சுத்தத் தகைமைய தாகும் தானே "

என்று ஒழியத்தக்கனவாகிய கேவலாதீதத்தையும் சகல சாக்கிரத்தையும் நீக்கி நின்று, ஒழியாத நிலையில் உள்ள ஐந்தாவதாகிய சுத்த அதீதத்தை, முதலாகிய சுத்த சாக்கிரத்தில் எய்தும் நிலை " சாக்கிராதீதம் " எனப்படும் என்றருளினர்.

சாக்கிராதீதம் என்பது கீழாலவத்தையில், சாக்கிரத்தினின்றும் கேவலத்திற்கு இழியும் அதீதத்தையும் குறிப்பின், குற்றம் என்று தள்ளல் இயலாது. அப்பெயர்க்கு அது பொருளாதல் சொல்லின்படி உள்ளதேயாகும். ஆயினும்

எப்பெயரும் பெரியோர் ஆட்சியில் எக்கருத்துடையது? அக் கருத்தையே அவ்வாட்சி நோக்கிப்பொருள்கோடல் அறிஞர்க்குத் தகும். ஆசிரியர் உமாபதிசிவனார், 'இரண்டும் கூடாது ஒழிய எனப்பட்டன, "ஆசு(-ஆணவம்) நிறைந்த கேவலமாம் நீர்மை(யதாய) நீக்கமில் அதீதம்" ஒன்று, "கலாதிசேர்ந்த சகலமாந்தன்மை(யதாய) சாக்கிரம்" ஒன்று. இவ்விரண்டும் முறையே கேவலமும் சகலமும் ஆவன. ஒழியற்பாலன. 'சாக்கிரா நிதம்' என்பது 'சுத்தத்தகைமையது. ஒருநிலையில் நிடுவது, அவ்விரண்டும் போலக் கேடுறுவது அன்று. 'இரண்டுங் கூடாதொழிய' என்று அவற்றைக் குறித்தும், 'ஓர் நிலையில் நீடும் சாக்கிரா தீதம்' என்று அவ்விரண்டின் வேறுபடுத்து உரைத்தும் ஆசிரியர் உபதேசித்தருளினர். இஃது அவத்தையை உணர்த்தும் இடத்திலே கூறப்பட்டது. பின்னர் அச்"சாக்கிரா தீத நிட்டை"யை உபதேசிக்கும் இடத்திலே,

> "பொற்புறு கருவி யாவும் புணராமே அறிவிலாமைச்
> சொற்பெறும் அதீதம் வந்து தோன்றுமே தோன்றிநின்ற
> சிற்பர மதனல் உள்ளச் செயல் அறுத்திட உதிக்குந்
> தற்பரம் ஆகிநிற்றல் சாக்கிரா தீதம் தானே"

என உபதேசித்தருளினர். இதிலும் முன்னைத் திருவிருத்தத்திற் குறித்த சகல சாக்கிரத்தையும் கேவலாதீதத்தையும் ஒழிய வேண்டும் என்றுணர்த்துவதறிக. சாக்கிராதீதம் எனப்படும் நிட்டையைத் தெளித்தவாறும் தெளிக. 'தோன்றிநின்ற சிற்பரம்' 'அதனல் உள்ளச் செயல் அறுத்தல்' செயல் அற்ற போது 'உதிக்கும் தற்பரம்' அத் தற்பரம் ஆகி நிற்றல் (நிட்டை) என்று ஒன்றன்பின் ஒன்றாக நிகழும் முறைப்படி கூறும் இவ்வுண்மையை அம்முறையிலேயே எய்துதல் (நிட்டைக்கிரமம்) நிற்கும் முறை - அடைவு ஆகும். அவ்வாக்கம் சிவப்பேறு. சிவத்தைப் பெறுந்திறத்துள் நிகழ்வன எல்லாம் சிவப்பேறு என அடங்கும். ஆக்கத்தின் முன்னரே நீக்கம் உண்டு. அந்நீக்கம் (1) சகல நீக்கமும் (2) கேவல நீக்கமும் என்ற இரு நீக்கமாகும். அவை (1) பொற்புறு கருவியாவும் புணராமே நீக்குவது ஒன்று. (2) அறிவிலாமைச் சொற்பெறும் அதீதம் வந்து தோன்றுமே நீக்குவது ஒன்று. அப்புணராமையும் தோன்றுமையும் பாசவிடு என அடங்கும். 'விடுபேறு' என்ற உம்மைத் தொகையில், விடுவது பாசத்தை. பெறுவது சிவத்தை. சாக்கிராதீதம் விடுபேறு ஆயிற்று. பொற்புறு கருவியாவும் புணர்ந்த நிலை சகல சாக்கிரம். அறியாமையாகிய நிலை உற அக்கருவிகளின் நீக்கமே கேவலாதீதம். (சகல)

சாக்கிரமும் (கேவலத்தில்) அதீதமும் சாக்கிராதீதம் எனத் துவந்துவ சமாசம் ஆகலாம். அச்சாத்திரமும் அதீதமும் ஒழிதல் இன்றி, இச்சுத்த சாக்கிராதீதமான நிட்டையைக் கூடல் என்றும் இன்று. சிற்பரம் என்றது வகாரப்பொருளை. தற்பரம் என்றது சிகாரப்பொருளை. சிற்பரவியோமம் திருச்சிற்றம்பலம் எனப் பட்டது வகாரப்பொருளே. பொற்புடன் நடஞ்செய்கின்ற பூங்கழல் (திருவடியாகிய சிவாநந்தம்; சிவாநந்தாநுபூதி) என்றது சிகாரப்பொருள்.

சகலமும் கேவலமும் நீங்கிய சுத்தத்திலே முதலதாகிய சாக்கிரத்திலே ஐந்தாவது அதீதத்தைப்புரிவது சாக்கிரா தீதம் என்பது இதுவரையில் விளக்கலாயிற்று. ஆகவே, சகல சாக்கிரத்தில் சுத்த அதீதத்தைப் புரிவது என்பார் கூற்றுக் கொள்ளற்பாலதன்று சிவப்பிரகாசத் திருவிருத்தம் இரண்ட னுள்ளும் 'இரண்டும் ஒழிய' கருவியாவும் புணராமே தோன்றி நின்ற சிற்பரம். 'அறிவிலாமை' யாகிய அதீதம் வந்து தோன்றுமே தோன்றி நின்ற சிற்பரம் என்றுள்ள அருள்மொழி களால் சகலசாக்கிரமும் கேவலாதீதமும் அகன்றதே 'சாக்கிராதீதம்' ஆகும் எனப்பட்டது. இதையே,

"நனவாதி யந்தத்தின் நாடுசுகந்தன்னைக்
கனவாதி யந்தத்திற் கண்டு"

என்றது சிவபோகசாரம்.

இதன் உள்ளுறை என்ன? 'சுகம்' நித்தியமாயுள்ள சுத்தாவத்தையுள் முதலதாகிய சாக்கிரத்தே முடிவதாகிய அதீதத்தைப் புரிவது சாக்கிராதீதம் என்பதாகும். நனவாதி யந்தம் சுத்த துரியாதீதம். அங்கேதான் சுகம் நாடப்படுவது. படவே நனவாதியந்தம் என்றது சுத்தாவத்தையைக் குறித்ததே யாகும். அந்தத்தில் நாடு சுகம் என்றது சுத்த துரியாதீ தத்துறும் சிவபோகத்தை. அச்சிவபோகத்தைக் காண்டல் கனவாதியந்தத்தில் என்றது, சுத்த சாக்கிரத்தில் என்றவாறு. மீண்டும் நனவாதி என்றது உலகத்தை. நனவாதி தோன்றிடு தல் உலகந்தோன்றல். பதார்த்த திருட்டி. நனவாதி தோன்றிடும் போது அந்தச் சுகரூபம் காண்டல் பரஞானத்தாற் பரத்தைத் தரிசித்தோர், பதார்த்தங்களைப் பாராமல், பரமே பார்த்திருத்த லாகும். என்றும் மாற்றிடுதல் - எக்காலத்தினும் பாசம் சாராத வாறு பரஞானநிட்டைமேவி நிற்றல். சுகரூபம்காண்டல்- சுகத்தை அடைதலின்முன் அச்சுகத்தினது சொரூபத்தை யுணர்தல்.

சுத்தாவத்தையில் ஒருகருவியும் புணராமையின், காண்டல் என்பது தூய வுணர்வால் அடைதல். நனவாதி தோற்றிடல் - உலகில் உண்டாம் சருவசங்கம்.

'நனவாதியந்தத்தில் நாடு சுகத்தைக் கனவாதியந்தத்திற் கண்டவர்கள்' என்றது அதீதத்தைச் சாக்கிரத்தில் புரிந்தவர்கள் என்றதாம். நனவாதி தோற்றிடும்போது அந்தச் சுகரூபங் கண்டவர்கள் என்றது பரஞானத்தாற் பரத்தைத் தரிசித்தோர் பரமே பார்த்திருப்பவர்கள் என்றதாம். மாற்றிடுவர் என்றும் மலம் என்றது உலகில் சருவ சங்க நிவிர்த்தி வந்த தபோதனர் கள் என்றதன் உண்மையாம். அஃதாவது மலம் என்றும் மாற்றிடுதல் - உலகில் சருவசங்க நிவர்த்தி. தபோதனர்கள் - சுகரூபம் கண்டவர்கள் என்றவாறும்.

கனவாதியந்தம் என்றதை நனவின் இடத்திற் கனவை வைத்து, அதைச் சாக்கிரத்தானமாகக் கருதிக் கனவு, சுழுத்தி, துரியம், துரியாதீதம், நனவு என அதீதத்தானத்தில் நனவை வைத்துக் 'கனவாதி' என்றதற்கு நனவு என்று பொருள் கொள்ளல் பொருந்தாது. நனவும் கனவும் மாறி மாறி நிகழ்தல் ஆகிய அநுபவம் உண்டு. அதீதம் நீங்கிய உடனே நனவுண் டாதல் என்றும் இன்று. அதீதம், துரியம், சுழுத்தி, கனவு நனவு என்னும் முறையில் நிகழ்வது இயல்பு. சுழுத்தி முதலாய மூன்றும் உருமல் கனவு நனவு என்ற இரண்டுமட்டும் உறுதல் உண்டு. அப்போது கனவு ஆதியாய் நனவு அந்தமாதல் உண்டு. கனவாதியந்தம் என்று சாக்கிரத்தைக் குறிப்பது குற்றம் அன்று. விரிவஞ்சி இவ்வளவில் நிறுத்துதும்.

தருமையாதீன வெளியீடாகிய சாத்திரங்களும் தோத்திரங் களும் என்றதில் அடங்கிய முதல்நான்கு நூல்களையும் உணர்க.

## *100 வயது வாழ வழி*

டோக்கியோ, செப். 16. 100 வயதுக்குமேல் வாழ விரும்புபவர்கள் நன்ருகத் தூங்கவேண்டும். கிராமப் பகுதி களில் வாழவேண்டும். உடலுழைப்புச் செய்யவேண்டும். புத்தி தெளிவாக இருக்கவேண்டும். உடல் பெருக்கக் கூடாது. புரதச் சத்து மிகுந்த உணவை உட்கொள்ள வேண்டும் என்று தனியார் ஆராய்ச்சிக் குழு ஒன்று கண்டுபிடித்துள்ளது. 100க்கு மேற்பட்ட வயதான 117 ஜப்பானியர்களிடையே நடத்திய ஆராய்ச்சியில் இந்த உண்மை தெரியவந்தது. நன்றி. தினமணி

# மானுடம் கற்குமோ ?

புலவர். திரு. இரா. செல்வக்கணபதி

நூறுபொன் வேண்டியச் செல்வனிடம் - நான்
நொய்மை மனத்தொடும் நின்றிருந்தேன் !
ஆறுத லாயவன் பேசவில்லை - நல்
அன்பு முகத்தொடும் பார்க்கவில்லை ;
நூறுபொன் தந்தனன் வாங்கிவந்தேன் - என்
நொய்மை நிலைமாறி விட்டதற்பின்
ஆறுபொன் சேர்த்தவன் முன்னிலையில் - கடன்
அடைத்த மகிழ்வினில் மீளுகின்றேன் ;

மீளும் வழியினில் வெப்பத்தினால் - தலை
மிக்கக் கொதித்திட வீழ்ந்துவிட்டேன் ;
நாளும் இரந்திடும் ஏழையவன் - எனை
நன்கு புரந்தனன் நீர்தெளித்தே !
மூளும் பரிவொடு நோக்குகின்றான் - அன்பு
மூட்டும் மொழிகளைப் பேசுகின்றான்
நாளும் இரந்ததில் ஓர்பிடியால் - என்
நன்னிலை மீட்டுத் திரும்புகின்றான் !

அன்பிலான் தந்த பொன்னினுக்கோ - ஒரு
ஆறுபொன் வட்டி தரத்தெரிந்தேன் ;
அன்புடை ஏழையின் தொண்டினுக்குத் - தர
ஆன மறுபொருள் காணுகிலேன் !
பொன்னிற் சிறந்த உயிரிரக்கம் - தனைப்
போற்றி யுணர்ந்தனன் வாழ்க்கையிலே !
அன்புடை இன்சொல் ; தொண்டுநெறி - தனை
ஆக்கிடக் கற்குமோ மானுடமே ?

— ஓர் ஆங்கிலக் கவிதையின் தழுவல்.

# உடலும் உயிரும்

நீதிபதி, கனம். எஸ். மகராஜன் பி. ஏ., பி. எல்.,

மனித வாழ்க்கையில் உயிருக்கும் உடம்புக்கும் உள்ள உறவு இருக்கிறதே, அது மிக மிக விசித்திரமானது. இந்த உறவைப் பொய்யுறவு என்று சிலர் வெறுத்துத் தள்ளியிருக்கிறார்கள்; மெய்யுறவு என்று கண்டு வாழ்த்தியிருக்கிறார் திருமூலர்.

திருமூலருடைய கொள்கையைப் பற்றிப் பேசுவதற்கு முன்னால், ப்ராய்ட் (Freud) முதலிய மேல் நாட்டு மனோதத்துவ ஆசிரியர்கள், ஆல்டஸ் ஹக்ஸ்லி (Aldous Huxley) முதலிய பிரபல இலக்கிய கர்த்தர்கள் இந்த உறவைப்பற்றி என்ன நினைக்கிறார்கள் என்று சற்று பரிசிலனை செய்வோம். மனிதனுடைய ஆன்மாவுக்குத் தனியான சுதந்திரம் என்று ஒன்றுமில்லை; அது முற்றிலும் உடலுக்கு அடிமைப்பட்டிருக்கிறது; உடம்போ, தன்னைச் சுற்றியிருக்கும் சூழலுக்குக் கட்டுப்பட்டிருக்கிறது. ஆகவே, ஆன்மாவானது அடிமைக்கு அடிமையாக இருந்து குற்றேவல்செய்கிற வஸ்துதான் என்று மேற்சொன்ன இருவரும் வற்புறுத்துகிறார்கள்.

ஏதோ, உடலைப் பாதிப்பது ஓரளவு மனசையும், உயிரையும் பாதிக்கும் என்பது உண்மைதான். அஜீரணத்தினால் நமக்குக் கோபம் வருவது சகஜம். வெள்ளைக்கார கவர்னர்களிடம் தயவு எதிர்பார்த்துச் செல்லுகிறவர்கள், உடலை வாட்டுகிற சென்னை நகரத்திலேபோய் அவர்களைப் பார்ப்பதில்லை. உடல் குளிர, உள்ளங்குளிர உதகமண்டலத்திலே இருக்கும்போது அவர்களைப் பேட்டி கண்டு வெற்றிகரமாக திவான் பஹதூர் பட்டமெல்லாம் பெற்றுவந்திருக்கிறார்கள் நம் நாட்டு உள நூற் புலவர்கள்.

ஆனால், 'ஆன்மாவுக்குத் தன்னிச்சையென்பதே கிடையாது. உடம்பு சொன்னபடியெல்லாம் ஆடுகிறது' என்றகொள்கையைத் தான் ஒப்புக்கொள்ள முடியவில்லை. வாஸ்தவந்தான். இந்த இரண்டு தத்துவங்களுக்கும் இடையே நடக்கிற போராட்டத்தைப் பார்க்கும்போது நமக்கு ஓரளவு சோர்வு ஏற்படுகிறது;

ஆன்மாவிடத்திலே நமக்கு அனுதாபங்கூட ஏற்படுகிறது. உயிரை அவமானப்படுத்தி, அதன்கொட்டத்தை யடக்கவேண்டுமென்றே இந்த உடம்பு நமக்கு ஏற்பட்டதோ என்றுகூடச் சந்தேகிக்கிறோம். தொண்டைப் புகைச்சல், ஜலதோஷம், காசம், பக்கவாதம் — இப்பேர்ப்பட்ட நோய்களை ஆயுதமாகக்கொண்டு, உடம்பு உயிர்மீது படையெடுக்கிறது. இந்த யுத்தம், உலகம் தோன்றிய நாள்முதல், ஒருதலைப் பக்ஷமாகவே முடிகிறது. இன்று, இல்லையேல் நாளை. உயிர் உடம்புக்கு இரையாகிறது; உணர்வு என்பது நீங்கி, மயக்கமும், அவஸ்தையும், வாயாலெடுப்புந்தான் மிஞ்சுகிறது. வாழ்க்கையில் ஆன்மாவுக்கு ஸ்தானம் இல்லை. எல்லாம் உடம்பும், அது செய்கிற அட்டூழியமுந்தான். இளமையில் மிகுந்த அழகோடு பொலிகிறது உடம்பு. முதுமையிலோ, மசகு போடாத வண்டியைப்போல, மொழிக்கு மொழி திணறிக்கொண்டு கீச்சல் போடுகிறது. ஆகாசத்திலே கண்ணுக்குத்தெரியாமல் சஞ்சரித்துக்கொண்டிருக்கிற கிருமிகள், கொக்கரித்துக்கொண்டு, உடம்பிலே புகுந்து, விரைந்து பெருகி அற்புதமான உடற் கருவிகளைப் புசித்து, உயிர்ச்சத்தைக் குடித்து, உடம்பை த்வம்ஸம் செய்கின்றன. மிஞ்சுவது என்ன? ஒரு பிடி சாம்பல். அரைப்பிடி கந்தகம். கொஞ்சம் சுண்ணும்பு. ஒரு ராத்தல் கரி. அரசியலைப்பற்றி அவன் பேசின வீரப் பேச்சுகள், தேனிலே குழைத்தது போன்ற அவன் குரலினிமை, சுத்தப் பிரம்மத்தைப் பற்றிய அவனது சித்தாந்த நுட்பங்கள், திடீரென்று கொப்புளித்து மறையும் அவன் புன்முறுவல், கடவுளிடத்திலே அவன் வைத்திருந்த அபார பக்தி — இவ்வளவும் மறைத்து, மிஞ்சுகிறது என்ன? ஒரு பிடி சாம்பல். அரைப்பிடி கந்தகம். ஒரு ராத்தல் கரி....... ஆன்மாவாவது! மண்ணுங்கட்டியாவது?

ஆனால், இந்த மண்ணுங்கட்டிக்குள்ளே உயிர் எப்படி வந்து தொத்திக்கொண்டது? "அப்பத்தை எப்படிச் சுட்டாளோ? அதில் — தித்திப்பை எப்படி வச்சாளோ?" என்றுனே, அந்தக் குழந்தையைப்போல, கேள்விக்குப் பதில் தெரியாமல், அதிசயத்திலே கேள்வியையும் மறந்துவிடுகிறோம். சலனமற்ற, அறிவற்ற, உயிரற்ற, அறுகுநுனி பனியணைய சிறிய துளி ஒன்று கர்ப்ப வாழ்க்கையை ஆரம்பிக்கிறது. சிறிது காலத்தில் பனித்துளி ஜவ்வு மாதிரி உருவெடுக்கிறது. பின்னால், புழுவைப்போல் நெளிய ஆரம்பிக்கிறது. சில நாட்கள் கழிகின்றன; இறக்கை முளைத்த மீன் போலக் காட்சி அளிக்கிறது. இந்த விசித்திர வஸ்துக்குள்ளே, ஒரு இதயம். அதற்குள்ளே ஒரு துடிதுடிப்பு உணர்வு — ஒரு நாள் இது பிறந்து, மீசை முளைத்த ஆண்

மகனுக விளைந்து, இன்பதுன்பத்தை நுகர்வதும், காதலிப்பதும், வெறுப்பதும், நினைப்பதும், சிந்திப்பதும், கற்பனைக்கோட்டைகள் கட்டுவதும் — என்ன விசித்திரம்! அன்று உணர்வில்லாத ஜவ்வாக இருந்த ஒரு பொருள், இன்று இறைவன் என்ற ஒரு பொருளைக் கற்பனை செய்து வணங்குகிறது. இறக்கை முளைத்த மீனுக இருந்த ஒரு பொருள், நன்மை, தீமை என்ற இருவினைகளைச் சீர்தூக்கி எடைபோடுகிறது. புழுவைப்போல நெளிந்துகொண்டிருந்த அது, இன்று சீதக் கதிர் மதிமேல் சென்று தேனுண்ணுகிறது; இசையலைமேல் மிதந்து நாதப்பிரம்மத்தை நாடுகிறது; கவிதையை ரசித்துக் கட்டடங்காக் களிப்பெய்துகிறது. இப்படியெல்லாம் செய்கிற ஆன்மாவிருக்கிறதே, ஏன் புழுவடையும் பாண்டத்தோடு, ஒரு பிடி சாம்பலாகக் காத்திருக்கும் உடம்போடு உறவு கொண்டது!

இந்தக் கேள்விக்கு ஒரு அற்புதமான விடையளிக்கிருர் திருவள்ளுவர் :

“ அன்போ டியைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு
என்போ டியைந்த தொடர்பு.”

அன்பே ஸ்வரூபமாக உள்ள ஒரு சக்தி உலகங்களையெல்லாம் இயக்கிவருகிறது. அந்த சக்திதான் இந்த எலும்புக்கூட்டோடு ஆன்மாவைக் கொண்டுவந்து இணைத்திருக்கிறது. ஆகவே, அன்பை அடித்தலமாகக் கொண்ட இந்த உறவு வெறுக்கத்தக்கதல்ல. பெரிதும் விரும்பத்தக்கது என்ருர் குறள் ஆசிரியர். வள்ளுவரின் வழித் தோன்றலாகிய திருமூலரும் இந்த மர்மத்தை யுணர்ந்தவர். ஆல்டஸ் ஹக்ஸ்லிக்கு ஏற்பட்ட சந்தேகம் அவருக்கும் ஏற்படாமலில்லை.

“ உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன் ”

என்று சொன்னவர் அன்பின் திறத்தை உணர்ந்தவராகையால், உடலுக்குள்ளே ஒரு புதுமையைக் கண்டார்.

“ உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன் ”

என்று ஒலமிடுகிருர். கிறிஸ்தவ சமயத்திலும், “the in-dwelling God” (“உடலுக்குள் உறையும் இறைவன்”) என்ற சித்தாந்தத்தை ஒப்புக்கொள்ளுகிருர்கள்.

உடலினுள் உத்தமன் கோயில் கொண்டிருக்கிருன் என்ற உண்மையைக் கண்ட மாத்திரத்திலேயே திருமூலர், உடம்பு

உயிரைக்காட்டிலும் மேம்பட்டது. அதை உரிய முறையில் ஓம்ப வேண்டும் என்று பறைசாற்றுகிறார்.

உயிர் இந்த உடல் மூலம் பெறுகிற அனுபவங்களால் உயர்ந்த நிலையை யடைகிறது. உயிரை உய்விக்கும் கருவியாக உடலைக் கருதவேண்டும். உடம்பார் அழிந்துவிட்டால், உயிரார் அழிவார். அனுபவமும் அழிந்துவிடும். ஆகவே, உடம்பை வளர்க்கவேண்டும். மிருகத்திமிரை வளர்க்கும் முறையிலே உடம்பை வளர்த்தால், உயிருக்குப் பயனில்லை. ஆகையால், வளர்க்கும் உபாயம் அறிந்து உடம்பை வளர்க்கவேண்டும்.

> " உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
> உடம்பை வளர்த்தேன், உயிர் வளர்த்தேனே "

என்பது திருமந்திரம்.

உயிருக்கு இதமான முறையிலே உடம்பை வளர்ப்பது எப்படி என்பதைப்பற்றிப் பல பாடல்கள் பாடியிருக்கிறார். இங்கேதான், "சாவியை இழந்துவிட்டோமே, அர்த்தம் புரிய வில்லையே" என்று கையை விரிக்கவேண்டியிருக்கிறது.

ஆல்பெர்ட் ஷ்வைட்ஸர் (Albert Schweitzer) என்ற ஜெர்மன் தத்துவ ஞானி உலக சமயங்களை யெல்லாம் இரண்டு வகையாகப் பிரிக்கிறார். ஒன்று, "கடவுள் மாத்திரமே உண்மை; வாழ்க்கை, உடம்பு — எல்லாம் பொய்" என்று கருதுவது. மற்றொன்று, "கடவுள் உண்மை; அவர் அமைத்த வாழ்க்கையும் உண்மை" என்று கருதுவது. எது சரி, எது தப்பு என்று சொல்வது கஷ்டமான காரியம். ஆனால் ஒன்றுமட்டும் நிச்சயம். வாழ்க்கை பொய்யென்று கருதுகிறவர்கள் இமயமலைச் சாரலிலே யுள்ள பனிக்குகைகளை நாடிச் செல்வார்களேயொழிய, வாழ்க்கையைத் திருத்தி அமைப்பதிலோ, மக்களுக்குச் சேவை செய்வதிலோ, நோயோடும் வறுமையோடும் போராடுவதிலோ மனசை ஈடுபடுத்தமாட்டார்கள். வாழ்க்கை உண்மையானது, தன்னல மற்ற பரிபூரணமான வாழ்க்கைமூலந்தான் ஆன்மாவுக்கு விமோசனம் உண்டு என்று நினைக்கிறவர்கள் சமூக சேவையிலே உற்சாகத்தோடு ஈடுபடுகிறார்கள். மேற்சொன்ன ஷ்வைட்ஸர் என்பவர், "மேல்நாடுகள் வறுமையையும், பிணியையும் வென்று உன்னதமான வாழ்க்கை நடத்திவர, கீழ்நாடுகளில் உயர்ந்த வாழ்க்கைத்தரம் இல்லாமலிருப்பதற்குக் காரணம், சமயக் கோட்பாட்டின் வேற்றுமைதான்" என்று சொல்லிவிட்டு, "ஆனால், தமிழ் நாட்டில் மாத்திரம் வாழ்க்கையின் உண்மையை அறிந்த

பல ஞானிகள் இருந்திருக்கிறார்கள் என்று "Indian Thought" என்ற நூலிலே ஒப்புக்கொள்ளுகிறார். அவர் ஒப்புக்கொள்ளுவதற்கிணங்க திருமூலரும் மனிதனை நடமாடும் கோயில் என்றே கூறியிருக்கிறார். "படங்களும், சிலைகளுமுள்ள கோயிலிலே இறைவனைச் சேவிப்பதைக்காட்டிலும், நடமாடும் தெய்வமாயிருக்கும் மக்களுக்குச் சேவை புரிவதே மேல். மனித சமுதாயமே நான் வணங்கும் ஈச்வர சந்நிதானம்" என்று மிகுந்த துணிச்சலோடு பாடுகிறார் :-

"படமாடக் கோயில் பகவற்கு ஒன்று ஈயில்,
நடமாடக் கோயில் நம்பர்க்கு அங்கு ஆகா ;
நடமாடக் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயில்,
படமாடக் கோயில் பகவற்கு அது ஆமே."

அதிதீவிர நாஸ்திகப் புரட்சிவாதிகள்கூட சமூக சேவைக்கு இவ்வளவு அழுத்தம் கொடுத்ததில்லை. பெர்ட்ரன்ட் ரஸ்ஸெல் (Bertrand Russel) போன்ற நாஸ்திகர் சொல்வதெல்லாம், "ஆன்மா, கடவுள் என்பதைப்பற்றிக் கவலையில்லை, தன்னலமற்ற சேவையிலே தனியான இன்பம் இருக்கிறது. ஆகையினால், அதைச் செய்யவேண்டும்" என்பதே. இந்தக் கொள்கையிலே ஒரு வறட்சியிருக்கிறது. சமூக சேவையினால், மனசிலே ஒரு இன்பம் மாத்திரமல்ல, ஆன்மாவுக்கு வளர்ச்சியும் ஏற்படுகிறது என்று திருமூலரோடு நாம் நம்பினால், தொண்டு செய்வதிலே, நாஸ்திகர்களைக்காட்டிலும் பன்மடங்கு உற்சாகமும், சோபையும் நமக்கு ஏற்படுமல்லவா ?

---

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Vaithianathaswami Devasthanam, Vaithiswarankoil.

I am very grateful to visit this so holy and interesting Temple in this peaceful place which invites the visitor to meditation.

I take this opportunity to express my gratitude to the Temple authorities who allowed me proceed to such a visit.

(Sd.) Mr. F. Mutin,
Paris - France.

10—8—73.

# ஆன்மீக நன்மைகளைச் சேகரிக்கும் கருவி

மின்சாரத்தைச்சேகரிக்கும் பாட்டரிகளைப் போல, நாம் செய்யும் பிரார்த்தனைகளின் ஆன்மீக நன்மைகளைச்சேகரித்து வைக்கப் புதியகருவி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக 'இந்து' நாளிதழ் ஒரு செய்தியை வெளியிட்டிருக்கிறது.

54 வயதுள்ள, இங்கிலாந்தின் யார்க்ஷயர்மாநிலத்தைச் சேர்ந்த டாக்டர். ஜார்ஜ் கிங் இந்த அரிய கண்டுபிடிப்பைச் செய்திருக்கிறார். இறைவனுக்கு முன்னே நின்று நிகழ்த்தப்படும் கூட்டுப் பிரார்த்தனையால் விளையும் ஆன்மீக நன்மைகளை ஓர் பேழையில் சேகரித்துவைக்க முடியுமென்றும், போர், பஞ்சம் முதலியன நேருபோது, இதனை வெளிப்படுத்துவதன் மூலம், பிரார்த்தனையின் பலனைப் பெற முடியுமென்றும் கூறுகிறார்.

தற்போது 200 பேர் நிகழ்த்திய பிரார்த்தனையின் ஆன்மீகச் சக்தியை ஓர் பேழையில் இவர் சேகரித்திருக்கிறார். இதனை எங்கே, எப்படிப் பயன்படுத்துவது என்பதை அறிஞர் குழு ஒன்று தீர்மானிக்கும் என்கிறார் இவர். ஆப்பிரிக்காவில் மழை பெய்யவும், பஞ்சத்தை நீக்கவும் இப்பேழை உபயோகப்படுத்தப்படலாம் எனத் தெரிகிறது.

முக்கோணவடிவமுள்ள ஒரு தாங்கியில் வைக்கப்பட்டுள்ள இப்பேழை இயங்கும்போது மெல்லிய ஒலியில் வடமொழியில் ஓதுதல் கேட்கிறது. ஐவர் இப்பேழையின் அருகிலிருந்து ஓதுகிறார்கள்.

இச்சக்தியைச் சுக்கிர கிரகத்திடமிருந்து (Venus) கிடைத்த சில சமிக்கைகளால் கண்டிபிடித்ததாக டாக்டர். ஜார்ஜ் கிங் கூறுகிறார்.

—நன்றி: 'இந்து'-15—8—73.

உ

குருபாதம்

# தீபாவளி வாழ்த்து

தீபஒளி ஏற்றுகின்றோம்; இருள்க டிந்து
தெய்வத்தைப் போற்றுகின்றோம்; திருநாள்
[கண்டோம்!
பாபவலி தீர்க்கின்றோம்; வெடிகள் சுட்டுப்
பல்லாண்டு பாடுகின்றோம்; புனிதம்
[கொண்டோம்!
தாபவலி மாய்க்கின்றோம்; எண்ணெய் தேய்த்துத்
தக்காரைப் பணிகின்றோம்; காமம் கொன்றோம்!
கோபவலி களைகின்றோம்; புதிது டுத்துப்
பொல்லாங்கு வீழ்க்கின்றோம்; புதுமை பூத்தோம்!

சூழட்டும் நலமெல்லாம்; இன்பம் எங்கும்
சுழன்றாடிப் பாடட்டும்; தமிழர் வாழ்வில்
ஆழட்டும் தீதெல்லாம்; நலமே சேர்ந்து
அன்பெங்கும் அரசோச்சி வழிகாட் டட்டும்;
வீழட்டும் பகையெல்லாம்; மக்கள் வாழ்க்கை
வென்றூர்த்துச் செழிக்கட்டும்; தீபம் ஏற்றிச்
சூழட்டும் ஒளிவெள்ளம்; திருநாள் நெஞ்சில்
தெய்வீக உணர்விற்கு நலஞ்சேர்க் கட்டும்!

[ 588-ஆம் பக்கத் தொடர்ச்சி ]

பொன்னும், பொருளும், அனுப்புவர். மேதாதக்ஷிணாமூர்த்தி மகாபிஷேக அசோசியேஷன் இப்பணியைச் செய்கின்றது.

கோயில் சமீபகாலத்தில் திருப்பணி செய்யப்பட்டுத் தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களால் கும்பாபிஷேகம் செய்விக்கப்பட்டது (1957). மேதா தக்ஷிணாமூர்த்திக்குக் கோடி அருச்சனையும் செய்விக்கப்பட்டது.

துலாமாதத்தில் இக்கோவிலிலிருந்து கங்கை அம்மன் மகர வாகனத்தில் (முதலை) காவிரிக்கரைக்குச் செல்வது மிக விசேஷமானது. காவிரியில் மூழ்கி கங்கை தன் பாவத்தையும் மக்களால் கரைக்கப்பட்ட பாவங்களையும் போக்கிக் கொள்கின்றாள் என்பது புராணம். துலாமாதத்தில் கடைமுகத்தன்று கங்கை காவிரியில் கலப்பது மற்றுமொரு விசேஷம்.

இக்கோயிலில் மிக அழகான மேதாதக்ஷிணாமூர்த்தி செப்புப் படிமம் உள்ளது.

இக்கோயிலில் நவக்கிரகங்களும் சிறப்பாக அமைந்துள்ளன. பிரதி சனிக்கிழமையும் சனிபகவான் சந்நிதியில் மக்கள் கூடுகின்றனர். கார்த்திகை மாதத்தில் சனி பகவானுக்கு விசேஷ அபிஷேகம் செய்யப்படுகின்றது. வடக்குப் பிராகாரத்தில் உள்ள துர்க்கையின் சந்நிதியும் விசேஷமானது.

வள்ளலார் கோயில் மேற்குப் பார்த்த சந்நிதியையுடையது. வதாந்நியேசுவரருக்கு அழகான நாகாபரணம் உள்ளது.

வள்ளலார் கோயில் தருமையாதீனத்தின் அருளாட்சிக்கு உட்பட்ட 27 திருக்கோயில்களுள் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

---

## EXTRACT FROM THE VISITOR'S BOOK

Dharmapuram Adhinam

Sri Sattanathaswami Devasthanam Sirkazhi.

"I was very happy to visit this temple. The authorities in charge deserve praise for the neat up-keep of the temple and maintenance. A place worth visiting often for peace and calm."

(Sd.) A. Krishnamurthy,<br>
23—9—73. S. E. (H. W. & R W.)<br>
Madras 34.

# செய்திகள்

தருமையாதீனம்

## ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காதேவி திருக்கோயிலில்
## 23 ஆவது சதசண்டி வேள்வி விழா

பசியும் பிணியும் நீங்கி உலகில் வசியும் வளனும் சுரக்க வேண்டி, தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் திருவுளப்பாங்கின் வண்ணம், தருமையாதீனத்தில் கோயில்கொண்டு பதினெண் திருக்கரங்களால் அருள்வெள்ளம் பெருக்கும் ஸ்ரீ மகாலட்சுமி துர்க்காதேவிக்கு 27—9—73 முதல் 6—10—73 முடிய நவராத்திரி நாட்களில், 23 ஆவது சதசண்டி வேள்வியும். விசேஷ அபிஷேக ஆராதனைகளும். நவசக்தி அர்ச்சனை ரூபமாக லக்ஷார்ச்சனையும் மிகச்சிறப்பாக நடந்தேறின.

அம்மையின் திருமுன்பில் வண்ண மின்விளக்குகளால் கவினுற அமைக்கப்பெற்றிருந்த வேள்வி மண்டபத்தில் யாக கலசங்கள் எழுந்தருள்விக்கப்பெற்று, பத்துநாட்களும் முறையான வழிபாடுகள் மிகச் சிறப்பாக நடைபெற்றன.

விழா நாட்களில் காலை - மாலை இருவேளையிலும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் அன்பர்கள் புடைசூழ எழுந்தருளி வழிபாடாற்றிப் பக்தர்களுக்குத் திருவருட் பிரசாதங்கள் வழங்கி ஆசீர்வதித்தார்கள். நாடோறும் காலைமாலை சதசண்டி வேள்வியோடு சுவாசினீ, குமாரி வடுபூஜை, சதுர்வேத பாராயணம், துர்க்காசூக்த பாராயணம். திருமுறைப்பாராயணம், அபிராமி அந்தாதி பாராயணம் முதலியனவும், ஸ்ரீ வித்யாசக்ரமாகிய மேருவிற்கு சகஸ்ரநாமார்ச்சனையும் நடைபெற்றன.

5—10—73 கலைமகள் விழாவன்று சப்தசதி ஹோமம், மகா பூர்ணாகுதி இவற்றுடன் சதசண்டி வேள்வி நிறைவெய்திற்று.

6—10—73 விஜயதசமியன்று ஸ்ரீ மகாலட்சுமி துர்க்காதேவிக்கு வேள்விச் சாலையில் பத்து நாட்களாக வழிபடப்பெற்று வந்த யாக கலசங்கள் எழுந்தருளிச் செய்யப்பெற்று ஆயிரக்கணக்கான அன்பர்கள் முன்னிலையில் அபிடேகம் செய்விக்கப் பெற்றது.

விழா நாட்களில் இரவு 8 மணி அளவில் அம்மை திருமுன்பில் ஆனந்ததாண்டவபுரம் பிரம்மஸ்ரீ பி. இராமதாச ஐயர்

அவர்கள் பூர்ணாகுதி நிறைவில் தேவிபாகவத விரியுரை நிகழ்த்தினார்கள். தருமையை அடுத்த சிற்றூர்களிலிருந்தும், மாயூரத்திலிருந்தும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் நாடோறும் அம்மையை வழிபட்டு இருமைப்பயனும் பெற்றுய்ந்தனர்.

## தருமையாதீனக் கல்வி நிலையங்களின் கலைமகள்விழா

27–9–73 முதல் 6–10–73 முடிய நவராத்திரி நாட்களில் தருமையாதீனத்தில் அருளாட்சியில் தழைத்து வரும் கல்வி நிலையங்களின் கலைமகள்விழா திருநெறிய தெய்வத் தமிழ் மன்றத்தில் சிறப்பாக நடந்தேறின. ஆதீன அன்பர்களும், மாயூர நகரப் பெருமக்களும் விழா நாட்களில் சிறப்புரை நிகழ்த்திச் சிறப்பித்தனர். கல்வி நிலைய ஆசிரியப் பெருமக்களும், மாயூரம் அ. வ. அ. கல்லூரி தமிழ்த்துறை விரிவுரையாளர்களும் பல்வேறு தலைப்புக்களில் விரிவுரைகள் நிகழ்த்தினர். தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி மாணவ மாணவியர்கள் நாடோறும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் அருளாசியோடு அம்மை அருள் நலம் வியக்கும் சிற்றிலக்கியங்கள் பற்றியும், கவித்திறம் வல்ல பெண்பாற் புலவர்கள் மற்றும் அருளாளர்கள் பற்றியும் உரை நிகழ்த்தினர். ஆதீனக் கல்வி நிலைய மாணவ மாணவியர்களால் சிறப்பான கலை நிகழ்ச்சிகள் நிகழ்த்தப்பெற்றன.

## தருமையாதீனத் திருக்கோயில்களில் நவராத்திரி விழா

தருமையாதீனத்தில் அருளாட்சியில் வளர்ந்துவரும் திருக்கோயில்களில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருவுளப் பாங்கின்வண்ணம் நவராத்திரிவிழா மிகச்சிறப்பாக நடந்தேறின.

நவராத்திரிவிழா நாட்களில் ஆதீனத் திருக்கோயில்கள் யாவற்றிலும் உலக நலங்கருதி அம்மைக்கு விசேஷ அலங்கார ஆராதனைகளும், லக்ஷார்ச்சனையும் நடைபெற்றன.

நவராத்திரி விழாவை ஒட்டி ஆதீனத் திருக்கோயில்களில் சொற்பொழிவு நிகழ்ச்சிகளும் நிகழ்ந்தேறின. அன்னையின் அருள் நலம் பேசும் பல்வேறு இலக்கியங்கள்பற்றி அன்பர்கள் பலரும் உரை நிகழ்த்தினர். தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி மாணவர்கள் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் அருளாசியொடு திருக்கோயில்களில் உரிய தலைப்புக்களில் உரையாற்றிப் பயிற்சிபெற்றனர்.

விழாத் தொடர்பாகத் தருமையாதீன பிரச்சார ஊர்தியின் வழி சிற்றூர் மக்களுக்கு விழாச்சிறப்பினை எடுத்துரைத்து,

அவர்களையும் திருக்கோயிலுக்கு வரச்செய்து வழிபாட்டிலும், சொற்பொழிவு நிகழ்ச்சியிலும் பங்கேற்கும் வண்ணம் செய்யப் பெற்றது. திருக்கோயில்கள் தோறும் அம்மைக்கு கொலு வழி பாடுகள் நடைபெற்றன. விழா நாட்களில் ஆயிரக்கணக்கான அன்பர்கள் அம்மையைத் தரிசித்தும் சொற்பொழிவு நிகழ்ச்சி களைச் செவிமடுத்தும் திருவருள் பெற்றனர்.

குத்தாலம்

## ஸ்ரீ குருஞானசம்பந்தர் வார வழிபாட்டுக் கழகம்

நமது ஆதீனக் குருமுதல்வர் திருநாமத்தால் விளங்கும் குத்தாலம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் வார வழிபாட்டுக் கழகத்தின் சார்பில், நமது ஆதீன அருளாட்சிக்கு உட்பட்ட ஸ்ரீ உக்த வேதீஸ்வர சுவாமி திருக்கோயிலில், 5—8—73 ஞாயிற்றுக்கிழமை ஆடிச் சுவாதியை ஒட்டி 'சுந்தரமூர்த்தி சுவாமிகள்' திருநாள் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமி களுக்குச் சிறப்பு வழிபாடும் சந்தனக்காப்பு அலங்காரமும் நடைபெற்றன. பின்னர் நிகழ்ந்த பிரசாரக் கூட்டத்தில் தருமை யாதீனத்தின் சார்பில் புலவர் திரு. இரா செல்வக்கணபதி கலந்துகொண்டு 'குருஞானசம்பந்தரும் - சுந்தரரும்' என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினர். திருப்பனந்தாள் புலவர் திரு. த மா. வெள்ளைவாரணம் அவர்கள் 'சுந்தரர் செந்தமிழ்' என்ற தலைப்பில் உரையாற்றினர். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் விழாச் சிறக்க அருளாசி வழங்கியிருந்தார்கள். நூற்றுக்கணக்கான அன்பர்கள் விழாவில் பங்கேற்று நலம் பெற்றனர். வழிபாட்டுக் கழகத் தலைவர் திரு. சிங்காரஞ் செட்டியார் அவர்களும், செயலர். திரு. கோவிந்தராஜுலு அவர் களும் மிக்க ஆர்வத்தோடு விழா நிகழ்ச்சிகளைத் திட்டமிட்டு அமைத்துச் சிறப்புற நிகழ்த்தினர்.

கவுண்டம்பாளையம் (கோவை)

## ஸ்ரீ குருஞானசம்பந்தர் இறைபணி மன்றம்

கோவை மாவட்டம் தேவையம்பாளையம் ஸ்ரீ நந்தீசுவரர் திருக்கோயில் 22—9—73 சனிக்கிழமை மாலை மேற்கண்ட இறை பணி மன்றத்தின் சார்பில் மண்டல பூஜையும், விளக்கு வழிபாடும், சமயப்பேரவையும் நிகழ்த்தப்பெற்றன. திருக்கோயில் தொண்டர். திரு. கிருஷ்ணதாஸ் விழா ஏற்பாடுகளைச் செய்திருந் தார். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் ஆசியுரை அனுப்பி யருளியிருந்தார்கள். முறையான வழிபாட்டிற்குப்பின் பேரூர். தவத்திரு. சாந்தலிங்க இராமசாமி அடிகள் தலைமையில் சமயப் பேரவை நடைபெற்றது. தக்கார் பலர் கலந்துகொண்டு விரிவுரையாற்றினர். மன்ற அமைப்பாளர் திரு. எம். பால சுப்பிரமணியன் நன்றி கூறினர் மக்கள் திரளாக வழிபாட்டில் கலந்துகொண்டு நலம் பெற்றனர்,

# எதிர்காலம்

ஜோதிஷார்ணவம்

திரு. K. முத்துஜோதிடர்

( பிரமாதீசஹ ஐப்பசிமீ 1வ முதல் 30வ முடிய )

( 17—10—73 முதல் 16—11—73 முடிய )

பிரமாதீசஹ ஐப்பசிமீ முதல் தேதி உதயாதி 17 நாழிகை 57 விநாடிக்கு திருவாதிரை நக்ஷத்திரம் முதல் பாதத்தில் மகர லக்னத்தில் லோக ரக்ஷகரான ஸ்ரீ சூரிய பகவான் துலா சங்கிரமணமாக துலாராசி பிரவேசம் செய்கிறார். அதனுடைய பலன் சுபிக்ஷம், தான்ய விருத்தி. விலைவாசி குறைவு, அமைதி முதலிய சுபங்கள் ஏற்படும்.

குறிப்பு :— பிரவேச சமய லக்கினமானது. மேல்கண்ட நாழிகைக்கு மகரமாகிறது அன்று புதன்கிழமை ராகுகால சம்பந்தம். மகரத்துக்கு 6ல் சந்திரன் சனி கேது சேர்க்கை. பகல் வேளை மூன்றாவது யாமம். ஆதலால் உலக க்ஷேமம் அடைய எவ்வித ஈதிபாதைகளும் இயற்கை கோளாறுகளும் தக்ஷிணபாரதத்தை பீடிக்காமல் இருக்க. பூமியில் அவதரித்திருக்கும் சாதுக்கள் இடைவிடாது சதா ஸ்ரீ பகவானை பிரார்த்தித்துக்கொண்டு மஹாயஞ்ஞங்களையே நடத்த வேணும். சுபமாகும்

## 1. மேஷம் – அசுவதி – பரணி – கார்த்திகை ¼

மேஷராசி 9 பாதங்களும் மிச்சிரமான பலனைத்தரும். அதிகமான உழைப்பும், அலைச்சலும் ஏற்படும். சுபகாரியங்களாலும் அதிக சிலவுகள் ஏற்படும். எதிர்பாராத சில நன்மைகள் உண்டாகும். புதன், வியாழன் சுபமாகும்.

## 2. ரிஷபம் – கார்த்திகை ¾ – ரோஹிணி – மிருகசீர்ஷம் ½

ரிஷபராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். ஜீவனம் ஓங்கும். குடும்பம் ஓங்கும் மேலோர் பெரியோர்களின் அன்பு கிடைக்கும் சுபகாரியங்கள் நடந்து கொண்டு இருக்கும். வெள்ளி, சனி சுபமாகும்.

3. மிதுனம்–மிருகசீர்ஷம் ½ – திருவாதிரை–புனர்பூசம் ¾

மிதுனராசி 9 பாதங்களும் சுபத்தையேதரும். வெகு காலமாய் எதிர்பார்த்து நடக்காத காரியங்கள் நடக்கும். தொழில் ஓங்கும். புத்திராதிகளால் நன்மை உண்டாகும். ஞாயிறு. திங்கள் சுபமாகும்.

4. கடகம் – புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்

கடகராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். விவசாய காரியங்களில் சிரமம் ஏற்படும். குடும்பத்தொல்லை அதிகமாகும் ஸ்திரமில்லாமல் ஜீவனம் கிடைக்கும். உழைப்பு அதிகமாகும். செவ்வாய், புதன் சுபமாகும்.

5. சிம்மம் – மகம் – பூரம் – உத்திரம் ¼

சிம்மராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். உத்தியோகம் ஓங்கும். ஆரோக்யம் உண்டாகும். நஷ்டதனம் வந்து சேரும். இல்லறசுகம் ஓங்கும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

6. கன்னி – உத்திரம் ¾ – ஹஸ்தம் – சித்திரை ½

கன்னியாராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். அதிகமாக உழைப்பும், ஜீவன விருத்தியும் உலகத்தில் பிரசித்தியும் ஏற்படும். இல்லறசுகம் ஓங்கும். புத்திராதிகளால் நன்மை ஏற்படும். சனி, ஞாயிறு சுபமரகும்.

7. துலாம் – சித்திரை ½ – சுவாதி – விசாகம் ¾

துலாராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். ஆரோக்யம் உண்டுபண்ணும், ஜீவன விருத்தியாகும். தெய்வபக்தியும் தெய்வீகமான காரியங்களும் உண்டுபண்ணும். சகல காரியங்களும் சித்தியாகும். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

8. விருச்சிகம் – விசாகம் ¼ – அனுஷம் – கேட்டை.

விருச்சிகராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். அதிகமான சிலவுகள் வந்துசேரும். எதிர்பார்த்த காரியங்கள் தவக்கமாக நடக்கும். வரவு செலவு சமமாகும். வைத்தியச் செலவு உண்டாகும். புதன், வியாழன் சுபமாகும்.

9. தனுசு – மூலம் – பூராடம் – உத்திராடம் ¼

தனுர்ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். இடம் மாறி லாபம் கிடைக்கும். புத்திராதிகளால் நன்மை உண்டாகும். குடும்பம் ஓங்கும். ஆரோக்யம் உண்டுபண்ணும். வெள்ளி, சனி சுபமாகும்.

**10. மகரம்-உத்திராடம் ¾ – திருவோணம் – அவிட்டம்**

மகரராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். இடம் மாறுதல் ஏற்படும். உத்தியோகம் ஓங்கும். மேலோர் பெரியோர்களின் அன்பு கிடைக்கும் ஸ்தாவர ஜங்கம சொத்துக்கள் வந்துசேரும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

**11. கும்பம் – அவிட்டம் ½-சதயம் –பூரட்டாதி–¾**

கும்பராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். தூர தேசத்தில் இருந்து பந்துக்கள் சினேகிதர்களுடைய சேர்க்கை ஏற்படும் படிப்பு விருத்தியாகும் ஆரோக்யம் தரும். கீர்த்தி பத்திரம் கிடைக்கும் செவ்வாய், புதன் சுபமாகும்.

**12. மீனம் – பூரட்டாதி ¼ – உத்திரட்டாதி – ரேவதி**

மீனராசி 9 பாதங்களும் பூர்ணமாக சுபத்தையே தரும். வியவகாரம் ஜெயிக்கும். நஷ்டதனம் வந்துசேரும். படிப்பு விருத்தியாகும் புதிதாக உத்தியோகமும் உண்டாகும். எப்பொழுதும் சுபமான காரியங்கள் நடந்துகொண்டு இருக்கும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

---

குத்தாலம்

## ஸ்ரீ குருஞானசம்பந்தர் வார வழிபாட்டுக் கழகம்

### நவராத்திரி விழா

தருமையாதீனத்திற்குச் சொந்தமான குத்தாலம் ஸ்ரீ உக்தவேதீஸ்வரர் திருக்கோயிலில் நவராத்திரி விழா 5—10—73 அன்று சிறப்பாக நடைபெற்றது. ஸ்ரீ குருஞானசம்பந்தர் வார வழிபாட்டுக் கழகத்தினர் தங்கள் 34-வது சிறப்பு வழிபாடாக இதனைச் சிறக்க நடத்துவித்தனர். அம்பாளுக்கு விசேட - அபிடேக - ஆராதனைகள் நடைபெற்றன.

திருவாவடுதுறை திருமுறை வாணர்கள் திரு. விசுவலிங்கம் திரு. சபாபதி சகோதரர்கள் திருமுறை இன்னிசை வழங்கினர். தருமையாதீனப் புலவர். மகாவித்துவான். திரு. சி. அருணை வடிவேலு முதலியார், பேராசிரியர். திரு. இரா. செல்வக்கணபதி மாணவர் திரு. முத்துக்குமாரராஜா ஆகியோர் அம்பிகையின் திருவருளை விளக்கிப்பேசினர். வழிபாட்டுக் கழகச் செயலாளர் திரு. சி. கோவிந்தராஜலு விழா ஏற்பாடுகளைச் சிறப்பாகச் செய்திருந்தார். அன்பர்களுக்குத் திருவருட் பிரசாதங்கள் வழங்கப்பெற்றன. அன்பர்கள் திரளாகக் கலந்துகொண்டு வழிபட்டுத் திருவருள் பெற்றனர்.